திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை: 9 14—10—55 : வெள்ளி : : விலை 3 அணா மலர்: 9

நேரு பண்டிதர் ஒருகை பார்த்து விடுவாராம்!

இருகைகளுடன் ஆதிக்கக் கொட்டமடித்தாலும் தென்னாட்டு மக்கள், உரிமையை இம்மியளவும் விட்டுக்கொடுக்க முடியாதே!

இந்திய ஆட்சி பீடத்தின் லகானைப் பிடித்துள்ள முதல்வரான நேரு பண்டிதர் அவர்கள், சென்ற வாரம் தமிழகத்தின் தலைநகரிலும் மற்ற பகுதிகளிலும் பவனி வந்த விவரம் நேயர்கள் அறிந்ததேயாகும், சென்னைக் கூட்டத்தில் அவர் பேசிய பேச்சினையும்ஊர் சுற்றிவிட்டுப்போகிற போக்கில் வேலூர் கூட்டத்தில் அவர் போட்ட ஆதிக்கக் கூப்பாட்டினையும் நண்பர்கள் கூர்ந்து கவனித்தால், நேரு பண்டிதர் பெங்களூர் கூட்டத்தில் தம்மை ஒரு "நாடோடி" என்று தாமே சித்தரித்துக் கொண்டது எவ்வளவு பொருத்தமுடையது என்பது தெற்றென விளங்கும்.

நேரு பண்டிதர்—சென்னை நகரில், தென்னாட்டு மக்களின் பண்பினை உயர்த்திப் பேசியதோடு இந்தியாவின் பிற பகுதி மக்களைவிட தென்னாட்டவர்களே அறிவாற்றலில், மிக்கவர்கள் என கோட்டைச் சுவர்மீது நின்றும் உரத்தக் குரலெழுப்பினார்.

ஆனாலும் நேரு பண்டிதர் பெற்ற இத்தெளிவும் விளக்கமும் அவருக்கு நீடித்திருக்கவில்லை. தமது கபாலத்தை வழக்கம்போல வேலூரில் காட்டிவிட்டார்!

அவரின் கபாலத்தைப் பற்றிக் கூட நாம் கவலைப்படவில்லை. ஆனால் அங்கு பேசிய பேச்சிலே அடங்கியுள்ள அரசியல் ஆணவத்தை நினைக்கும்போது உலக பவனி வரும் நேரு பண்டிதர், நாட்டில் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளையும், அதில் அடங்கியுள்ள உண்மைகளையும் அறிய முடியாதபடி ஆதிக்க வெறி அவரின் அரசியல் விவேகத்தை மறைக்கிறதே யென்று வருந்த வேண்டியிருக்கிறது.

நேரு பண்டிதர் — எத்தகைய எதிர்ப்புகளையும், தவறுகளையும் சகிப்பாராம்! விட்டுக் கொடுப்பாராம்!! ஆனால் நாட்டை மேலும் பிரிவினை யாக்குவதை (நாட்டுப் பிரிவினையை) ஒப்புக் கொள்ள மாட்டாராம்! அவ்வித கொள்கைகளை வளரவிடவோ சகித்துக் கொள்ளவோ முடியாதாம்! எனவே அந்தச் சக்திகளை அடக்க ஒரு கை பார்த்து விடுவாராம்!

இவ்வாறெல்லாம் ஆதிக்கக் கும்மாளம் அடித்திருக்கிறார் வேலூர் கோட்டை வெளியில்!

இந்தியா சுதந்திர நாடாகத் திகழ வேண்டுமென தேசிய இயக்கமும் மற்ற நிறுவனங்களும் பணியாற்றி அறப்போரில் ஈடுபட்டிருந்தபோது பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், நீங்கள் கேட்கும் சுதந்திரம் நேர்மையானது; தான் — இதோ தருகிறோம் வாருங்கள் என்று தலைவர்களை இரு கை நீட்டி அழைத்தார்களில்லை அன்று! எனினும் காலம், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கண்களைத் திறக்க வைத்தது. அதற்கேற்ப சற்று விவேகத்துடன் நடந்தனர். இந்தியாவும் சுதந்திர நாடாகத் திகழ அவர்களாகவே ஆவன செய்தனர். இது அரசியல் சரித்திரம் வெளிப்படையாகக் காட்டும் படிப்பினையாகும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமாவது தலைசிறந்த படை பட்டாளம், அரசியல் விவேகம் படைத்த நிபுணர்கள் ஆகியவர்களின் துணைக் கொண்டு அடக்கி யாண்டு வந்தது. நேரு பண்டிதர் ஆட்சியில் அவைகளின் 'தரம்' என்ன யென்பதை நாடறியும்!

நேரு பண்டிதர்களுக்கு உண்மையிலேயே இந்தியா துண்டாடப்படக் கூடாதென்ற மானபிமானம் இருந்திருந்தால், பர்மா, பாக்கிஸ்தான், இலங்கை ஆகிய பகுதிகள் துண்டிக்கப்பட்டபோது நேரு பண்டிதர்களைக் கொண்ட தேசிய முகாமினர் தடுத்திருக்க வேண்டாமா? அதற்கு பதிலாக தடிப்பான வார்த்தைகளைப் பேசி பார்த்துப் பயனின்றி இதே நேரு பண்டிதர் அந்தப் பிரிவினைகளுக்குக் குனிந்து கொடுத்ததை இதற்குள் மறந்து விட்டாரா யென்று கேட்கிறோம்.

திராவிட நாட்டுப் பிரிவினையை தி. மு. கழகம் வலியுறுத்திப்பணி

நக்கீரன்

யாற்றுகிற தென்றால், அக்கொள்கை இன்னின்ன வகையில் அநீதி என்று எடுத்துக் காட்டித் திருத்தவோ வாதிடவோ இதுவரை நேரு பண்டிதர் முன்வந்தாரில்லை. அதற்குப் பதிலாக அர்த்த மற்ற ஆவேசக் கூச்சலைப் போட்டு ஆதிக்கம் செலுத்த எண்ணுகிறார்.

வேலூர் கூட்டத்தில் இவ்வித கூச்சலைத்தான் நேரு பண்டிதர் கிளப்பியிருக்கிறார்! எனவே அவருக்கு நாம் பணிவன்புடன் அறிவுறுத்த ஆசைப்படுவதெல்லாம்,

"நாடு மேலும் பிரிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. அதை எதிர்த்தே தீருவேன்—ஒரு கை பார்த்து விடவும் தயார்—என்று எவ்வளவு அழுத்தமாக இந்திய ஆட்சிபீட முதல்வராகிய நேரு பண்டிதர் பேசுகிறாரோ—அதைப்போலவே மற்ற பிரச்னைகளிலாகிலும் தென்னாட்டு மக்கள் ஓரளவு விட்டுக் கொடுக்க மனம் ஒப்புவர்; தங்கள் தாயகம் தனி உரிமைப் பெறுவதை எப்பேர்ப்பட்டவர்கள் எதிர்த்தாலும் அதை இனி அனுமதிக்கவும் விட்டுக் கொடுக்கவும் முடியாது. அவ்வித அரசியல் ஆணவத்தை குனிய வைத்தே தீருவோம்"

என்பதே தென்னாட்டு மக்களின் தாழ்மையான எச்சரிக்கையும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் முக்கிய அறிவுரையுமாகும் என்பதை நேரு பண்டிதர்கள் புத்தியில் பதியவைத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

நமது இந்த உறுதிப்பாட்டிற்கு நேர்மையான உரிமைக்கு--காலம் வெற்றித் தேடித்தரப் போவதை நேரு பண்டிதர்கள் காணப்போவதும் திண்ணம்.

அரசியல் ஆதிக்கம் தங்களிடம் சிக்கிவிட்ட தென்ற எண்ணத்தால், பிற மாநிலங்களின் தனி உரிமையைத் தட்டிப் பறித்து வாழும் காலத்தை எவ்வளவு நீடித்துக் கொள்ள பேராசைப் படுகின்றனரோ அந்த காலம் வரை இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள பல்வேறு இனமொழி பகுதி மக்களிடையே நேச மனப்பான்மை மலருவதும் இயலாத காரியம் என்பதை நேரு பண்டிதர் உணர வேண்டுகிறோம்.

●

மாநில மாநாட்டு நிதிக்குச் சிறப்புக் கூட்டம்

சென்னை கோகலே மன்றத்தில்

16-10-55 ஞாயிறு காலை 9-மணிக்கு

●

தோழர். அ. பொ. அரசு, எம். சி., தலைமையில்

தோழர். என். வி. நடராசன்,

தோழர். எ. வி. பி. ஆசைத்தம்பி

மாநில புனரமைப்புக் குழுவின் முடிவு குறித்து பேசுவர்.

நன்கொடை அணா 8—4. செ. மா. தி. மு. கழகம்

ஆசிரமத்திலே ஒரு நாள்!

விட்டலபுரம் பி. சுப்பையா

நான் எனது அறையில் 'பிளேட்டோவின் அரசிய'லில் ஆழ்ந்து கொண்டிருந்தேன். மந்தகாசமான மாலைப் பொழுதினில் தென்றல் அழகிகள் அணியணியாக என அறைக்குள் ஜன்னலின் வழியாக வந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது உடல் நலிவுற்றிருக்கும் என் நண்பன் ரத்தினம் அறைக்குள் வந்ததும், வராததுமாக ஜன்னலை அடைக்கப் போனுன். அதைக் கண்டு நான் சிரித்தேன்.

"என்னப்பா சிரிக்கிருய்" என்ருன் அவன்.

'நாட்டிலே நல்ல பல கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்யும் தி. மு. க. வை பழமை விரும்பிகள் இது ஒரு நாத்திகக் கழகம்' என்று மக்களிடம் கூறித்தடுக்கப் பார்க்கிருர்கள்' என்றேன் நான்.

'ஆமாம். அதற்கும் நான் ஜன்னலை அடைக்கச் சென்றதிற்கும் என்ன தொடர்பு'

'உள்ளம் இனிக்க உவகையூட்டும் தென்றல் காற்று போன்ற பகுத்தறிவுக் கொள்கை, ஜன்னல் போன்ற எங்கள் (தி. மு. க.) வழியாக, அறை போன்ற மக்கள் மன்றத்திற்குச் செல்லுகிறது. அதை உடம்புக்கு உதவாத காற்று என்று கருதி உன்னைப் போன்ற உடல் நலிவுற்றவர்கள் ஜன்னலை அடைத்து தென்றலைத் தடுக்க யத்தணித்ததுபோல், எங்கள் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை நாத்திகப் பேச்சு என்று, மக்கள் மத்தியில், மூடக்கொள்கைகளாக உருவெடுத்து நடமாடும் உருவங்கள் கூறித்திரிகிருர்களே யென்றெண்ணித்தான் சிரித்தேன்'

'எதையும் உங்களுக்கு சாதகமாகச் சொல்லி என்போன்றவர்களை தலைகுனியும்படி செய்து விடுவீர்களே.........அது சரி இன்று (15-9-55) நம்வூர் சித்தா சிரமத்தில் மதுரை ஆதீனத்து தவத்திரு சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகளும்; அவரது காரியதரிசி போன்ற குலசை வீரசிவம் அவர்களும் பேசப் போகிருர்களே, போய் வருவோமா' என்ருன்.

*

நானும் நண்பனும் ஆசிரமத்திற்குச் சென்ருேம். அங்கு சன்னிதானம் பேசிக் கொண்டிருந்தது. சிவநேசச் செல்வர்களும் ஆத்திக அன்பர்களும் அடிகளாரின் அருளுரையை ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்தனர். கடைசியில் நானும் மகிழ்ச்சியடைந்தேன், நமக்கு இவ்வளவு பொறுமை இருக்கிறதே யென்றெண்ணி!

கடைசியில் சன்னிதானம் யாருக்கும் என்ன சந்தேகம் என்ருலும் கேளுங்கள்' என்று முழுமையும் தெரிந்தது போன்று கம்பீரத்துடன் கேட்டார். உடனே நான் அடிகளிடம் 'சாம்பிள்' ஒன்று கேட்டு வைப்போமே என்றேன். அருகிலிருந்த என் அண்ணு திரு. கணபதி அவர்கள் 'சன்னிதானத்திடம் கேட்பது பயங்கரம்! அது வேண்டாம், வீரசிவத்தின் மூலம் கேட்போம்' என்ருர்கள். அவர்கள் விரும்பியபடியே வாளா இருந்தேன்.

சரி என்று குலசை. வீரசிவத்திடம் 'மாற்று மதத்திலுள்ள சாக்கிய, பேய்த்தன்மை பொருந்திய சமணர்களின் எழில் நிறைந்த பெண்களை தன் சைவ சமயத்தில் சேர வில்லை என்ற ஒரே காரணத்திற்காக அவர்களை கற்பழிக்குமாறு மண்ணுலகிலும் விண்ணுலகிலும் எங்கும் நிறைந்திருக்கும் மதுரை ஆலவாய் சோமசுந்தரக் கடவுளை வேண்டுகிருர் அம்மையின் அருட் பாலுண்ட பாலகன் ஞான சம்பந்தன். அது இது :—

"மண்ணகத்திலும் வானிலு
[மெங்குமாம்
திண்ணகத்திரு வால வாயருள்
பெண்ணகத் தெழிற் சாக்கியப்
[பேயமண்
தெண்ணர் கற்பழிக்கத்
[திருவுள்ளமே"

'இந்த மாதிரி வார்த்தைகளை (கற்பழித்தல் போன்ற) தேவாரத்தில் கிடையாதே' என்ருர். 'செஞ்சொற்சிங்கம்' வீரசிவம்.

இருக்கிறதே, ஞான சம்பந்தன் பாடியிருக்கிருரே' என்றேன்.

'அப்படியானுல் நாளைக் காலையில் கொண்டு வாருங்கள்' என்ருர்.

சரி என்று காலையில் தேவாரத் திருமுறை அடங்கலை எடுத்துச் சென்றேன் ஆசிரமத்திற்கு. பாட்டைப் பார்த்தார் இருந்தது! ஒரு வேளை இது 'டூப்ளிகட்' தேவாரமாக இருக்குமோ என்று எண்ணி முதல் பக்கத்தைப் புரட்டிப் பார்த்தார். அது திருவாடுதுறையாதீனம் மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிக மூர்த்திகள் திருவுளப் பாங்கின்படி, சென்னை மெய்கண்டான் கல்லூரித் தலைமையாசிரியர் வண்ணக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களால் பல ஏடுகள் கொண்டு பார்வையிடப்பட்டு சென்னை நிரஞ்சனப் பதிப்பகத்தில் பதிப்பித்த (1929) புத்தகம் தான் அது என்று அறிந்தார்.

பின்னர்தான் அதற்கு பொருள் சொல்ல ஆரம்பித்தார். அதாவது 'கற்பழித்தல்' என்ற வார்த்தை வேறு பொருளில் வந்திருக்கும் என்ருர்' இருப்பினும் அவர் சொன்னது அவருக்கே திருப்தி இல்லை, அதனுல் சன்னிதானத்திடம் கேட்டுச் சொல்லுகிறேன் என்ருர். ஏனென்ருல் அது வேறு பொருளில் கையாளப் பட்டது என்ருல் முதல் நாள் இரவு நான் கேட்டபொழுது அதைச் சொல்லியிருக்கலாம். அப்பொது இம்மாதிரி வார்த்தைகளே தேவாரத்தில் வராவே என்று கூறினர். இதிலிருந்து 'கற்பழித்தல்' என்பது பெண்ணைக் கற்பழித்தல் என்பது தான் என்று நிச்சயப்படுத்தி விட்டார். இருப்பினும் அவர் இருக்கும் முகாமுக்குத் தக்க மழுப்பினுர் என்று சொல்வதைத் தவிர வேறென்ன சொல்வது!

சன்னிதானத்திடம் புத்தகத்தைக் கொடுத்தார். இசைப்பாணியில் அதைப்பாடி இதிலென்ன என்ருர்! அதை விளக்கம் கேட்டார் வீரசிவம். ஆனுல் அதற்கு விளக்கம் கொடாமல் 'தம்பிரானை எங்கே இராகுகாலம் வருவதற்கு முன் புறப்பட வேண்டுமே காரில் சாமானை எடுத்து வையுங்கள்" என்ருர். இதைக்கண்டு நண்பர்கள் ஆச்சரியப்பட்டனர்! ஆனுல் நான் எதிர்பாத்தது தான் நடந்தது!

இதற்கிடையில் வீரசிவத்திடம் ஞானசம்பந்தன் பாடிய மற்ரொரு பாட்டைக் கேட்டேன், அதாவது சிவனும், பார்வதியும் சோலைக்குச் சென்று காமக்கணையால் தாக்குண்டு நீண்டநேர புணர்ச்சியின் பத்திலிருக்க வேண்டும் என்ற காமாந்தகார எண்ணம் ஆண்டவனை ஆட்கொள்ள, சிவன் ஆண் யானையாகவும், உமைபெண்யானையாகவும் உருக்கொண்டு புணர்ச்சி செய்ய அதன் வழிவந்தார் பிள்ளையார்!

"பிடியதன் உருஉமை கொள
[மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு
[மவரிடர்
கடிகணபதி வர அருளின் மிகு
[கொடை
வடிவினர் பயில் வலி வர
[முறையிறையே"

இதைக் கேட்ட அவர் ஆறுமுக நாவலர் கூறியபொருள் கொள்ள வேண்டுமென்ருர். அதாவது அன்ன நடையுடையாள் என்ருல் அதன் சாயலைக குறிப்பது போல் பிடியின் சாயலை உமை கொண்டாள் என்பது.

எந்தக் கவிஞனுவது பெண்ணுக்கு யானையை உவமைக்கூறியதுண்டா? மேலும் 'பிடியதன் உருஉமை' என்ருல் உருவமேயெடுத்தாள் என்று இருக்கிறதே என்றேன்.

"கடைசியாக புராண இதிகாசங்கள் பாமரர்களுக்கு வேண்டி எழுதப்பட்ட பழங் கதைகள் தான். நான் என்றும் இப்படியேயிருப்பேனு? இன்னும் பத்து ஆண்டு கழித்தால் என் அறிவு கொண்ட முடிவைக் கொள்ளுவேன். நீங்கள் இந்தப் பாட்டைக் கொண்டு வந்தமைக்கு நன்றி செலுத்துகிறேன் என்ருர் வீரசிவம்.

ஆனுல் நான் ஆசிரமத்தில் போய் கேள்வி கேட்டது சன்னிதானத்தைக் கேலி செய்யத்தான்! சமணர்களை கழுவில் ஏற்றியது போல் ஏற்றுமளவுக்கு எங்களுக்கு சக்தி யிருக்கிறது என்று ஒரு குப்பைமேட்டுக் கோட்டான் கூறியிருக்கிருர். எழுதாத அளவுக்கு ஆபாசமான முறையில் தாக்கிப் பேசி யிருக்கிருர்—பேசியும் வருகிருர். இதுபோன்று முறை கெட்டத் தனமாக நடந்து கொள்ளாமல் 'அன்பே சிவம்' என்று கூறி அயோக்கியத்தனம் செய்ய முற்படாதீர் என்று கூறுகிறேன். மேலும் இதுபோன்றவைகளை பல சந்தித்தவன்தான் தி. மு. க. இயக்கத்திலுள்ள ஒவ்வொருவனும் என்று கூறிக் கொண்டு முடிக்கிறேன்.

●

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற

வெண் சங்கு சீயக்காய்த் தூள்

எங்கும் கிடைக்கும்

மணத்தில் மிகுந்த

செல்வம் ராணி ஊதுபத்திகளை

உபயோகியுங்கள்

தயாரிப்பவர் :

வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி

3037—38 டபீர் குளம்ரோடு

தஞ்சாவூர்

அறிவு இயக்க மன்றம்.

அமைந்தகரையிலுள்ள இம் மன்றத்தில் 2—10—55 காலை10 மணிக்கு நிர்வாக உறுப்பினர் தேர்தல் நடைபெற்றது அதில் செயலாளராக இரா. பார்சாரதி. தலைவராக தோழர் என். எஸ். தேவராசன். துணைச்செயலாளராக கெ. குப்புசாமி, பொருளாளராக இராதாகிருட்டிணன் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

திராவிடப் பூங்கா

வந்தைவேள்

"மூக்கணாங்கயிறு" இழுப்பு!

பொதுவுடமைக் கட்சிக்காரர்கள் பரந்த கண்ணோட்டங் கொண்டவர்கள். அவர்களது கட்சி அதனால்தான் அகில இந்திய ரீதியில் இயங்கி வருகிறது. தி. க., தி. மு. க., வைப் போல 'குறுகிய' எண்ணம் அவர்களுக்குக் கிடையாது. திராவிட நாட்டோடு நின்றுவிடக் கூடாது! மாஸ்கோ வரையில் பார்வையைச் செலுத்த வேண்டுமென்பதுதான் அவர்களது விரிந்த மனப்பான்மை! அது கிடக்க!

திராவிடன் 9—9—55-ந் தேதியிட்ட மலர் 4-ல்: "சிதம்பர ரகசியமா?" என்ற நக்கீரன் அவர்களது கட்டுரையைக் கண்டோமல்லவா? அதில் தட்சிண பிரதேச பிரச்னையை அலசிக் காட்டி திராவிட நாடு பிரிய வேண்டியதின் அவசியத்தை அழகாக வலியுறுத்தி இருந்ததையும் படித்தோம். அத்துடன் அறிஞர் அண்ணா அவர்களும் தட்சிண பிரதேச அமைப்பை 'மண் இட்லிக்கு' ஒப்பிட்டு குறை இறுத்தார். கேட்டோம்; படித்தோம்.

இதனைக் கண்டோ (கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி—என்றால் கோபம் வந்துவிடும்—அதனால்) சுயபுத்தி கொண்டோ, தமிழ் நாட்டு பொதுவுடமைக் கட்சியும் தட்சிண பிரதேச அமைப்பை எதிர்ப்பதாகக் காட்டியது.

தமிழ் நாட்டு பொதுவுடமைக் கட்சியின் சூத்திரக் கயிறு வடக்கே தானே இருக்கிறது? மேலிடத்தைக் கலக்காமல் தட்சண பிரதேச அமைப்பைத் தாக்க "இன்குலாப் ஜிந்தா பாத்!" என்று முஷ்டியைத் தூக்கலாமோ? என்னமோ கொஞ்சம் தூக்கினார்கள்! அவ்வளவுதான்! உடனே இழுப்பு! "மூக்கணாங் கயிறு டென்ஷன்!"—மேலிடத்து உத்தரவு வந்து விட்டது!

புது தில்லியில் பொதுவுடமைக் கட்சியின் மத்திய உறுப்பினர்கள் கூட்டம் அண்மையில் நடந்தது. அடுத்த ஆண்டு பெப்ருவரி 2-ந் தேதியிலிருந்து 12-ந் தேதி வரை கோழிக் கோட்டில் மாநாடு நடத்தும். அதில் ராஜ்யப் பிரிவினைச் சம்பந்தமாகக் கலந்தாலோசித்து முடிவு காணப்படும். அம்முடிவிற்கே எல்லா பொதுவுடமை வாதிகளும் கட்டுப்பட வேண்டும். (இயற்கை) — அதுவரைக்கும் எந்தப் பொது உடமை வாதியும் ராஜ்யப் பிரிவினையைப் பற்றி எவ்வித 'கீச்—மாச்" சத்தமுமின்றி இருக்க வேண்டும்—இதுதான்மத்திய இடத்தின் "கயறு—இழுப்பு."

இப்போது என்ன செய்யப் போகிறார்கள் தமிழ் நாட்டுப் பொதுவுடமைக் கட்சியினர்கள்? "கப்—சிப்"! பேசாதே! என்றுதான் கிடக்க வேண்டும்!

அடுத்த ஆண்டு பெப்ருவரி 2—12 க்குப் பிறகு நிலைமை எவ்வாறோ?

ஒருவேளை வாலுபோய்—கத்தி வந்த கதை யாகுமோ அல்லது "அடியோடு ஒழிக தட்சண பிரதேசக் கனவு"—என்ற குரல் ஓங்குமோ? வரட்டும் பிப்: 2—12!

எது எப்படி போயினும் ஒரு உண்மையை மட்டும் நன்கு உணர வேண்டும். தன் பிடியை வேறொருவனிடம் விடின் சாண் ஏறினால் முழஞ் சறுக்க வேண்டியது தான்!

காமத்தின் சமத்து!

எச். வி. காமத் ஐ.சி.எஸ். படித்தவர். கலெக்டர் பதவியை உதறித்தள்ளி பொதுப் பணியில் நுழைந்தவர். ஆற்றல் மிக்கவர், அறிவொளி, அஞ்சா நெஞ்சர். வாதத்தில் வல்லுநர். வீரத் தோற்ற முடையவர். வைர உள்ளம் பூண்டவர். சூதுமதி கொண்டப் 'டகைவரை' களீர் சூடு கொடுத்துத் திருத்துபவர். அவர் எக்கட்சியிலாகிலும் இருந்து போகட்டும்.

கடந்த பொதுத்தேர்தலில் மத்திய பிரதேசத்தில் நாகபுரி தொகுதியில் நின்று போட்டியிட்டார். "குல்மால்" டல புரிந்து அவரை எதிர்த்த காங்கிரஸ்வாதி வென்றார் எனத் தீர்ப்பானது. விட்டு விடுவாரா வீரர் காமத்?

தேர்தல் முடிவு செல்லாது என நீதிமன்றம் ஏறினார். பன்னாட்கள் வழக்காடினார். வென்றார் கடைசியில். "ஆமாம்! பொதுத் தேர்தல் தீர்ப்பு செல்லாது! மறுதேர்தல் நடந்தே தீரவேண்டுமென்று நீதி கிடைத்தது!

நடந்தது மறுப் பொதுத் தேர்தல் நாகபுரித் தொகுதியில். காங்கிரஸ்காரர் இறங்கினார் தேர்தல் களத்தில். எதிர்த்து நின்றார் காமத்! அமோக வெற்றியோடு வென்றார் காமத்! "காமத் ஒரு மதராஸ் துலுக்கன்—எனவே அவருக்கு ஓட்டு வழங்காதீர்கள்"—என்பன போன்ற விஷமப் பிரசாரங்கள் எடுபடாமற் போயின! தில்லி பாராளு மன்றத்தில் அங்கத்தினர் இடத்தைப் பிடித்து அமர்ந்தார்.

கூண்டிலிருந்த புலி அவிழ்த்து விடப் பட்டதாக அலறினார்கள் மன்ற காங்கிரஸ் எலிகள்!

வெட்டுப் பேச்சை வீசுவார் மன்றத்தில் காமத்! பேசாதே! உட்காரு! என்று ஊளையிடுவர் எதிர் அமர்ந்திருக்கும் காங்கிரஸ் காண்டா மிருகங்கள்!

உங்கள் கூட்டுத் தொகை "காண்டா மிருகப் போக்கால்" எனது பேச்சை நிறுத்தி விடுவீர்களென நினைப்பது கடைந்தெடுத்த முட்டாள்தனம்! பேதமை! (ஃபண்டாஸ்டிக்நான்சென்ஸ்) என்று நேரு பண்டிதரின் பிரியமான வசைச் சொல்லை கடன் பெற்று இடித்துரைத்து விட்டார் காமத்!

ஆ! என்னைத்தான் அப்படிக் கூறினாய் என்று "குட்டிச் சட்டாம் பிள்ளை" அனந்த சயன அய்யங்கார் ஆவேசப் பட்டார். ஒரு வாரத்துக்கு காமத் சட்ட சபைக்கு வெளியே என்று தண்டனை விடுத்துத் தீர்த்தார்.

ஆச்சாரிய கிருபளானி, "அய்யா, அய்யங்காரே! தாங்கள் தவறுதலாக எடுத்துக்கொண்டு காமத்தை வெளியேற்றி விட்டீர்! காமத் கடிந்துரை பகன்றது தங்களுக்கல்ல. அதோ முரட்டுச் சட்டை அங்கத்தினர்களைத்தான்" என்று தெளிவித்தார்.

சரி! வரட்டும் உள்ளே காமத்!—என்று தண்டனையைத் தளர்த்தினார் அய்யங்கார்!

வந்தார்! ஒரு நாள் நேருவைப் பிடித்தார்! தர்க்கத்தில் இறங்கினார்!

காமத்திடம் தர்க்கிக்க என்னால் இயலாது என்று வேடிக்கையாகக் கூறுவதைப்போல் கூறி நழுவிக் கொண்டார் நேரு!

மன்றத்தில் எல்லா இடங்களும் காலியாகவே கிடக்கும். உல்லாச வாசி அங்கத்தினர்கள் பெரும்பான்மையோர் போக, எஞ்சியுள்ளத் தலைகள் கொஞ்சமே! "கோரமில்லையே! கூட்டம் நடைபெறுவது சரிதானா? என்று ஓட்டையை வெட்ட வெளிச்சமாக்குபவர் காமத்! காமத்தே!

வெட்டுப்பிரேரணையின் போது ஓர் நாள் "நோ! நோ! நோ!" என்று அதிர் வெடிக்குரலில் இடி இடித்து ஒலி எழுப்பினார் காமத்.

எல்லோருக்கும், அதாவது அவரைப் பிடிக்காத கூட்டத்தாருக்கு மகா மகா எரிச்சலாய் விட்டது. நானோ! இங்கு வீற்றிருக்கும் மற்ற அங்கத்தினர்களோ!-செவிடர்கள் அல்ல! ஏன் இரைச்சல் குரல் எழுப்புகிறீர்! இதற்கேதாவது சட்டப்படி தண்டனை இருப்பதாகத் தெரியவில்லைதான்! ஆனால் இப்படி கூச்சல் குரலில் கூறுவது கூடாதென்றார். "சட்டாம் பிள்ளை" அய்யங்கார்!

நானென்ன பண்ணட்டும்! இயற்கை அளித்தக் குரல் என் குரல்! அதற்கு துரோகஞ் செய்ய விருப்பமில்லை! காதிருந்துங் கேளாதாருக்கு உரத்தக் குரலில் உரைத்தாலாவது ஏறுதா என்றுதான் எனது இயற்கை குரல் வலிமைகொண்டு சொல்லுகிறேன் என்றார் காமத்!

காமத்தைப்போல் சுறு சுறுப்பு உன்னிப்பு, கவலை நிறைந்த, அங்கத்தினர்கள் சபைகளில் நிறைந்து வழிந்தால் தான், வழுக்கி விழும் ஆட்சியை நிமிர்த்தி நிலை பெறச் செய்யலாம்.

காமத்தின் அடிச்சுவட்டைப் பின் பற்றக்கூடிய உரங்கொண்ட வீரர்கள் இவ் இந்திய தேசத்திற்கு அவசிந் தேவை! அப்போது தான் உருப்படும் நம்நாடு!

வாரா வாரம், பம்பாய் வார இதழ் "கரண்ட்" என்னும் சஞ்சிகையில் தீப்பொறி பறக்க எழுதி வரும், தில்லி மன்றத்தில் கனல் வீசப்பேசி பணியாற்றும் காமத்தின் சமத்தே சமத்தல்லவா?

முதலையின் முடிவு!

இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால்தானே! அதை விடுத்து கண்ட கண்ட இடங்களிலெல்லாம் அலைந்து திரிந்தால் அந்த கதிதான்! போன உயிர் இனி வருமா? அந்தோ! முதலையே! உன் கதி இப்படியா ஆகணும்! ஆ! கண்ணீர் மல்குகிறதே!

என்ன? முதலைக் கண்ணீர் வடிக்கிறேன் என்று கூறுகிறீர்கள்? இல்லை! இல்லை! ஆனந்தக் கண்ணீர் சொரிகிறேன்! ஏன்? எவ்வுயிருக்கும் ஆபத்து விளைவிக்காமல், தனது இருப்பிடமாகியப் பெருங் குளத்தைவிட்டு வந்து, ஓடுங் "கூட்ஸ் ரயிலில்" பக்குவமாகச் சிக்கி நசுக்குண்டு இறந்ததே அம்முதலை அதற்காக! குளத்திற்கு உற்ற ஆபத்தும் நீங்கிற்று! முதலை உயிர் போயிற்று! ஓடுங் 'கூட்ஸ் ரயிலும்' குடை சாய்ந்து விழாமல் தப்பித்து விட்டது!

அது என்ன சாமானியப்பட்ட முதலையா? இறந்த அதனுடலை அளந்து பார்த்ததில் பதினைந்து அடி நீளமும் (அதாவது மூன்று ஆள் உயரம்) இரண்டடி அகலமும், ஒரு அடி கனமும் இருந்ததாம். அப்போது நம்மைப் போன்றோரை எவ்வளவு இலகுவில்பிடித்து இழுத்துப் புசிக்கும் என்பதை நினைத்தாலே பயமாகத்தானிருக்கிறது! அப்படி அது ஆட்களைப் பிடித்துக் கொண்டால் இக்காலத்தில் எந்த "ஆதிமூலம்" சச்ராயுதத்தோடு காட்சி யளித்துக் காப்பாற்றப் போகிறான்? "சுவாகா"தான்! ஆதலால் அத்தனைக் கொடூரக் குணங்கொண்ட முதலை ஒழிந்தால் ஆனந்தக் கண்ணீர் தானே பெருக்கெடுக்கவேண்டும்!

இது கற்பனை அல்ல! தென்—கிழக்கு இருப்புப் பாதையில், பிலாஸ்பூர்—இரெயிபூர் தொடரில் ததபாரா ரயில் நிலையத்தை விட்டு ஓடிக் கொண்டிருந்த 'கூட்ஸ்' வண்டியின் சக்கரங்களில் அகப்பட்டு செப்டம்பர் பதினேழாம் நாள் மேற்கண்ட பெரு முதலை மாண்டதாம்!

முதலை, சக்கரங்களில் சிக்குண்ட அதிர்ச்சியைக் கண்டு, ரயிலோட்டி வண்டியை உடன் நிறுத்திவந்து பார்த்ததில் முதலை எனக் கண்டு வியந்தார்கள்! அது மாண்டதைக் கண்டு மகிழ்ந்தார்கள் அங்கு அதற்குள் கூடிவிட்ட ஆயிரமாயிர மக்கட் கூட்டம்! (இதுவே இரெயிபூர்ச் செய்தி).

9

காட்சி 23

இடம்—கோயிலின் முன் பகுதித் திண்ணை.

நிலைமை [பூசாரி பொன்னுரங்கம் பெரிய எழுத்து 'மகா பாரத'மும் கையுமாக அமர்ந்திருக்கிறான். அந்தப் பக்கமாக நடந்து கொண்டிருந்த மூர்த்தி பூசாரியைப் பார்த்ததும் நெருங்கி வருகிறான்.]

பொன்னுரங்கம்: வாப்பா மூர்த்தி...ஆளையே பார்க்க முடியலையே! இந்தக் காலத்திலே கோயிலுன்னுத்தான் ஓங்களுக்கெல்லாம் கசக்குது! வீரனைப் பார்க்க வராட்டித்தான் போவுது, இந்தப் பொன்னுரங்கத்தைக் கூடவா மறந்துடனும். ஓங்க அப்பாவும் நானும் எவ்வளவு நேசமா யிருந்தோங் தெரியுமா?

மூர்த்தி : உன்னை எப்படி மறக்க முடியும் பொன்னுரங்கம். கோயில் கோபுரம் மாதிரி உன் பெயர் நிலைத்து நிற்குது. ஊரிலேயே உன் ஆட்சிதானே நடக்குது...!

பொ : போ தம்பி — கேலி பண்றே! ஒன்னைப் பார்க்கப் பார்க்க...ஓங்க அப்பா நினைவு தான் வருது. இந்தக் கோயில் கட்டுறதுக்காக நானும் அவரும் எவ்வளவு சிரமப் பட்டோம் தெரியுமா? கோயில் கட்டி முடியுறதுக்குள்ளே மனுஷன் 'காலவதி' ஆகிவிட்டாரு...ஹூம்...... இப்படி உட்கார் தம்பி!

மூ : (உட்கார்ந்து கொண்டே) அது என்ன பொன்னுரங்கம் பெரிய புத்தகம்?

பொ : மகாபாரதந் தம்பி!

மூ : இதுக்கு இன்னும் வேலையிருக்கா?

பொ : என்ன தம்பி அப்படிச் சொல்லீட்டிங்க. இனிமேல்தான் 'இதுக்கு' சரியான வேலையிருக்கு! இந்த ஊரிலே என்ஆட்சி நடக்குதுன்னு சொன்னியே...அது இன்னும் நீடிக்கனும்னு இந்த மகா பாரதத்தாலேதான் முடியும் !

மூ : என்ன பொன்னுரங்கம் புரியலையே?

பொ: உனக்குப் புரியாது தம்பி —ஆனு நாளைக்கு நடக்கப் போறதை நான் நல்லாத் தெரிஞ்சு வச்சிருக்கேன். கொஞ்ச நாளைக்கு முன்னே நீ சொன்னப்படி இந்த ஊரிலே என் ஆட்சிதான் நடந்தது. ஆனு வீரனுக்கும் பகை தோன்றிட்டது!

மூ : வீரனுக்குப் பகையா?

பொ: ஆமாங் தம்பி...கணபதி குருக்கள்னு ஒரு 'பூனூல்' இங்கே குடி புகுந்திருக்கு...அது தான் நம்ம செல்வாக்கையே அடியோடு ஒழித்துக் கட்டப் பார்க்குது.

மூ : கணபதி குருக்களா உன்னோடு போட்டி போடுகிருர். மனுஷன் எலும்புந் தோலுமா பார்க்குறதுக்கே பரிதாபமா யிருப்பான்!

பொ : தம்பி உருவத்தைப் பார்த்து ஏமாந்துடாதே! தேள் எவ்வளவு சின்னதாயிருக்கு ஆனு அது கொட்டினு மனுஷன் எவ்வளவு துடி துடிக்கிருன்...அது போல குருக்களுக்கு அவ்வளவும் விஷம். சாமானியமா நம்பிடக் கூடாது.

மூ : உன் அளவிலே கணபதி குருக்கள் துரோகியாகி விட்டாரா?

பொ : குருக்கள் ரெண்டு மாசமா 'காலட்சேபம்' நடத்துருரே தெரியுமா தம்பி!

மூ: ஆமாம் 'ராமாயண' பிரசாரம் செய்கிருர்.

பொ: அந்த ராமன் கதைதான் இப்ப என் செல்வாக்குக்கே குழி தோண்டிக் கிட்டிருக்கு!

மூ: என்ன பொன்னுரங்கம்? ராமன் பெயரைக் கேட்டாலே கன்னத்துலே அடிச்சுக்குவியே... இப்ப ராமன் கதையையே வெறுக்குறியே...!

பொ : குருக்கள் ராமன் கதையைக் காலட்சேபம் செய்கிருர். கூட்டமோ அசாத்தியம். பக்தர்கள் பக்திப் பரவசத்திலே மயங்கி குருக்கள் பாதத்திலே காணிக்கையை மலையாக் கொட்டுறுங்க! இதனுலே நம்ம செல்வாக்கும், கிரமமா வீரனுக்கு வரவேண்டிய காணிக்கையும் பாதிக்கத்தானே செய்யுது. அதனுலே தான் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறேன்.

மூ : என்ன ஏற்பாடு?

பொ : ராமாயணத்துக்கு முன்னுலே—பாரதத்தை நீட்டப் போகிறேன். அதுதான் ஊராரின் பார்வையை வீரனின் பக்கந் திருப்பிவிட சரியான வழி! ஊர் மக்கள் ஒரு ஆட்டு மந்தை. யாரோ பிழைக்க வந்த குருக்களை நம்பியா பணத்தைக் கொட்டி அழரது! காட்டட்டும் பாரதத்துக்கு முன்னே அவன் கை வரிசையை!

மூ : பொன்னுரங்கம்! முன்னெல்லாம் 'மதுரை வீரன்' கதை நடத்துனியே!

பொ : அந்தப் பழைய 'பொய்க்கால்' ஆட்டமெல்லாம் இப்ப எடுபடாது! சாதாரண நாளா யிருந்தா அந்தக் கதைதான் இங்கே எடுப்பாவுது?......கணபதி குருக்கள் பெண்ணுய் பிறந்திருக்க வேண்டியவன். சாரிரம்எவ்வளவு அருமையாயிருக்கு தெரியுமா ? போதாததுக்கு......குருக்கள் புத்திரி 'சிதா' வேறே பின்னுலேயிருந்து குயிலாக்கத்துது!...மாடியிலேயிருக்கிற சீதையை—தெருவிலே நடக்கிற ராமன் எப்படி பார்க்கிருன். ராமனின் தேஜஸைப் பார்த்ததும் சீதாப்பிராட்டிக்கு என்ன ஆகுது...? 'டணர்'னு கேட்ட அந்தச் சத்தத்

மா. தங்கவேலர்

தைப் பத்திமட்டும் மனுஷன் ஒரு முழு மணிநேரம் விளக்கிச் சொல்ருன் !

மூ : அதுசரி! அதுக்கு பதிலா நீயும் பாரதத்திலே 'துயிலுரிந்த' கதையை விடிய விடிய எடுத்துச் சொல்லப்போறியா என்ன?

பொ : எடுத்துச் சொல்வதா? பக்கத்துக்குப் பக்கம் பாரதத்தைப் புட்டு புட்டுத் தரப் போறேன் !

மூ : பாரதத்தை 'பிட்நோட்டலா'க் கீட்டியே...எங்கே இப்படிக் கொண்டா?

[மகாபாரதத்தை பயபக்தியோடு மூர்த்தியின் கரத்திலே தருகிருன். மூர்த்தியோ ஏடுகளைப் புரட்டுகிருன். புத்தகத்திலேப் புதைந்திருக்கும்;' அந்தப் புகைப்படம்' மூர்த்தியின் கரங்களிலே தட்டுப்படுகிறது. படத்தை எடுத்துப் பார்த்துக் கொண்டே]

மூ : பொன்னுரங்கம் ! இதென்ன புகைப்படம் ?

பொ : [வேறு பக்கந் திரும்பிக் கொண்டே] ஹூம் — கோகிலம் எதையாவது மறந்து இதுலே வச்சிருக்கும். அது ஒரு சினிமா பைத்தியம். கண்ட படத்தைக் கத்திரிச்சு வச்சிருக்கும் !

(பொன்னுரங்கம் என்ன சொல்லுகிருர் என்பது கூட மூர்த்தியின்காதிலே விழவில்லை, கையிலிருக்கும் படத்தையே உற்றுப் பார்த்தான்.]

......ராஜத்தின் கன்னத்தை செல்லமாகக் கிள்ளிக்கொண்டே அணைத்திருந்தான் பலவேசம்.

......இந்தக் காட்சியை விளக்கி வைத்த புகைப்படம் — மூர்த்தியின் இதய வானத்திலே இடியையும். மின்னலையும் உண்டாக்கியது. அந்த இருண்ட வானத்தின் கருமேகங்கள் மூர்த்தியின் கண்களின் வழியாக நீரைக் கொட்டின. பொன்னுரங்கம் திரும்பிப் பார்ப்பதற்கும் முன்னதாக கண்களைத் துடைத்துக்கொண்டே... கம்மிய குரலில்,

மூர்த்தி : பொன்னுரங்கம்! இதோ படத்தைப் பார்த்துக் கூறு......

[படத்தைத் தருகிருன்— பர்ர்த்துச் சிரித்துக் கொண்டே]

பொன் : அடடே...இந்தப் படமா இது ராஜமும்—பலவேசமும் சேர்ந்து எடுத்துக்கிட்டாங்களாம். காலம் எப்படி மாறிப் போயிருக்கு பாரு தம்பி என்ன தான் உறவாயிருந்தாலும்...கலியாணத்துக்கு முன்னுலே இப்படியா—படம் பிடிச்சு அழகு பார்க்குறது சே! சே!......

மூர் : இந்தப் படம் உனக்கெப்படி......?

பொன் : நம்ம கோகிலம் கொண்டு வந்தா.......பெரிய இடத்து விஷயமாச்சே இதனுலே ...ஆபத்தானுலும் ஆகிடும்னு ரகசியமா இந்த பாரதத்திலே மறைச்சு வச்சேன். அது இப்ப ஒனக்குத் தெரிந்து போச்சு!

மூர் : பொன்னுரங்கம்! ராஜம் நல்லவளாச்சே......அவளா இப்படி......?

பொ : போ தம்பி...ஊரிலேயிருந்தாத்தானே இங்கே உள்ள விஷயம் உனக்குப் புரியும் நீ எங்கெங்கோ அலைஞ்சு திரிஞ்சுட்டு எப்பவாவது இங்கே தங்குறே ...பெரிய இடம்னு...நடவடிக்கையும் கௌரவமா யிருக்கும்னு நீ நினைக்குறே...தப்பு தம்பி அது சுத்தத்தப்பு...எல்லாம் வெளிப் பகட்டு. திரைக்குப் பின்னுலே நடப்பது எல்லோருக்குமே தெரியாது;

மு : எனக்குத் தெரிந்த வரை ......ராஜம் நல்லவளாகத்தானே நடக்கிருள்.

பொ : கண்ணுக்கு முன்னுலே நடக்குறது. நல்லாத்தானிருக்கும். புலி பசுத்தோலைப் போர்த்திக் கிட்டிருப்பதை மட்டும் நீ பார்த்திருக்கிருய் அந்த பசுத்தோலுக்குள்ளே யிருக்கும் புலி பலர் கண்களுக்குப் படுவதேயில்லை! இதோ பாரப்பா...உண்மையின் சொரூபம்...பசுத்தோல் நீங்கிய புலி......!

[பேசிக் கொண்டே—படத்தை மூர்த்தியின் முகத்துக்கு முன்னே நீட்டிக் காட்டுகிருன். பொன்னுரங்கம்.]

(முடியவில்லை தொடரும்)

○

இளங்கோ

தாரை வட்ட தி. மு. க. பொருளாளர் K. S. S பெரியார் அவர்களின் புதல்வர் K. S. பெரியசாமியின் ஆண் குழந்தைக்கு இளங்கோ என்ற பெயர் சூட்டப்பட்டது இதன் நினைவாக "திராவிடன்" இதழ் வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது வரப்பெற்ரேம். நன்றி (நிர்வாகி.)

ஏஜெண்டுகள் தேவை

தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், ஆகிய மொழிகளில் ரப்பர் ஸ்டாம்புகளை தயார் செய்கிறேம். ஆர்டர்களை வாங்கி அனுப்ப ஏஜெண்டுகள் தேவை. உடனே விண்ணப்பிக்கவும்.

அருணு ரப்பர் ஸ்டாம்ப் ஒர்க்ஸ்

குடியேற்றம் : : (தென் இந்தியா)

திராவிடன்

சென்னை : 14—10—55 : வெள்ளி

"ஜாதி ஒழிப்பு" திட்டம்!

●

நாட்டின் அரசியல்—பொருளாதார சுதந்திரமும் அதனை அடிப்படையாகக் கொண்டு, மக்களின் வாழ்வும் நிலைபெற்றிருக்க வேண்டுமானால், அந்நாட்டில் மலிந்துள்ள பழமை வெறியும் அதனைக் காட்டிச் சிலர் பெறும் சலுகைகளும் அறவே ஒழிக்கப்பட வேண்டுமென்பதை பகுத்தறிவுள்ள அனைவரும் மனதார ஒப்புக் கொள்வர்.

பழமை வெறியின் பிரதிபிம்பமாகத் தலைவிரித்தாடுவது—பிறவியின் பேரால் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு காட்டி அதற்கேற்ப தனிச் சலுகைகள் பெறுவதே யாகும்.

ஓயாமல் உழைத்துழைத்து உருக்குலையும் பெரும் சமுதாயத்தினரை பிற்படுத்தப்பட்ட-தாழ்ந்த வகுப்பார் என இகழ்ந்து உழைப்பின் பலனை அனுபவிக்க முடியாமல் உயர்ந்த ஜாதிக்காரர் என்ற ஆணவத்தைக் காட்டியும் அதற்கு ஆண்டவன், ஆகமம், வேதபுராணங்கள் ஆகியவைகளைத் துணைக் கழைத்தும் உழைக்காமலேயே வாழ்க்கையின் உயர் தன்மையை ஒரு சிறு வகுப்பினர் நீண்ட காலமாக அனுபவித்து வருகின்றனர்!

இக்கொடுமையை எதிர்த்து பொதுவாக புத்தர், விவேகானந்தர், ராஜாராம் மோகன்ராய் போன்றவர்களும் ஜட்பட் டோரக் மண்டல் எனும் நிறுவனமும் பணியாற்றி யிருப்பினும் சக்திவாய்ந்த மாபெரும் இயக்கமாக அமைக்கப்பட்டு, ஜாதிய வெறியையும் அதற்கு முட்டுக்கொடுத்து நிற்கும் 'மனுநீதி' என்ற அநீதிகளையும் தட்டிக்கேட்டு அதற்காக ஜாதி வெறியர்களாலும் சில சமயங்களில் ஆட்சி பீடத்தாராலும் பலவித கொடுமைகளுக்கு ஆளாகித் தொடர்ந்து பணியாற்றி வருவது சுயமரியாதை இயக்கமேயாகும்.

நாம் கூறும் இவ்வுண்மையை, இந்நாட்டு சனாதனிகள் கூட ஒப்புக் கொள்வர். ஏன் கடந்த 30 ஆண்டுகளின் நிகழ்ச்சிகளே இதனை எடுத்துக் காட்டும்.

அன்று, சுயமரியாதை இயக்கம் ஜாதி வெறிக் கொடுமையை எதிர்த்துப் போரிட்டபோது, இது நாத்திகத்தை வளர்த்து ஆத்திகத்தை அழியச் செய்யும், அதனால் அவனிக்கே கேடு பயக்கும் என்று கூப்பாடு போட்டனர் சனாதனிகள்!

சனாதனிகள் என்ன—இவ்வித ஜாதி வெறியால் எந்த சமூகம் தனது மானுபிமானத்தைப் பறி கொடுத்து வந்ததோ அந்த சமூகமாகிய நமது திராவிட மக்களில் பெரும்பான்மையினரே சுயமரியாதை இயக்கக் கொள்கையை எதிர்த்து வந்தனர்.

நாம் இன்னும் சென்ற கால சம்பவங்களை விவரித்துக் கூறுவதெனின் ஏடு இடங் கொள்ளாது.

சுயமரியாதை இயக்கத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகமாக மலர்ந்துள்ள இன்றுவரை சமுதாயத் துறையிலே நாம் அறிவுறுத்தி வந்த கொள்கைகளை, இன்று சென்னை முதலமைச்சர் காமராசர் அவர்களின் மூலமாக இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் மனதார உணர்ந்து வரவேற்றிருப்பதாக அறிகிறோம்.

ஜாதி வெறித் தன்மையை ஒழிக்க சென்னை முதலமைச்சர் காமராசர் அவர்கள் கீழ்க்கண்ட திட்டங்களைப் பின்பற்றப் போவதாகவும் தெரியவருகிறது.

1. ஜாதியை ஒழித்துக் கட்டியவர்களுக்கு அரசாங்க சலுகைகள் அளிப்பது.

2. ஜாதியை செயல் முறையில் ஒழித்தவர்களின் பிள்ளைகளுக்கு கல்விச் சலுகை அளிப்பது,

3. ஜாதி உயர்வு தாழ்வை ஒழிக்க, கலப்பு மணம் செய்து கொள்கிறவர்களுக்கு அரசாங்கம் வசதிகளைச் செய்து கொடுப்பது என்பதாகும்.

ஆனால் சர்க்கார் இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றப் போகிறார்களென்பது தெரியவில்லை.

எனினும் மற்ற காரியங்களில்தான் அரசினரின் சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தா சம்பந்த மிருக்காது என்பது பிரசித்திப் பெற்ற உண்மையாக விளங்கி வருகிற தென்றாலும் இந்தத் திட்டத்திலாகிலும் பழமை வெறியர்களின் மிரட்டலுக்கு அஞ்சாது சற்று உறுதியுடன் நடக்குமாறு காமராசர் அவர்களையும் ஏனைய அமைச்சர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகத்தின் கடமை உணர்ச்சி

★

திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சியிலும் அதன் தீவிர பணியிலும் நாஞ்சில் மாவட்டத் தோழர்கள் ஆற்றியுள்ள பணி என்றும் மறக்க முடியாததாகும். தி. மு. கழகம் தனது முதல் மாவட்ட மாநாடுகளை மாவட்டந்தோறும் நடத்துமாறு வேண்டுகோள் விடுத்தபோது நாஞ்சில் மாவட்டத் தி. மு. கழகம் தனது மாவட்ட மாநாட்டினை மற்ற மாவட்டங்களுக்குச் சிறிதும் தாழாது, சிறப்புற நடத்திக் கொடுத்தது என்று நாம் கூறினால் மிகைப்படுத்தியதாகுமென்று கழகத் தோழர்கள் எவரும் கருதமாட்டார்கள். அந்த அளவுக்கு கட்டுப்பாடு, ஒழுங்குமுறை, கடமை உணர்ச்சி ஆகியவைகளுடன் அம்மாநாட்டினை இனிதே நடத்திக் கொடுத்த பெருமை நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகத்திற்கும் அதற்குட்பட்ட கிளைக் கழகங்களுக்கும் என்றும் உரித்தானதாகும்.

அதுமட்டுமல்லாமல் திரு—கொச்சியிலுள்ள தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் சேர வேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் குழுவின் அறிக்கைக்கேற்ப அன்று நடைபெற்ற அறப்போரில் நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகமும், செயலாளர் தோழர் வி. எம். ஜான் அவர்களும் ஏனைய நண்பர்களும் ஆற்றிய அரும்பணி, அடக்குமுறைக் கொடுமைகளுக்கு ஆளாக வேண்டியிருந்த நிலை ஆகிய விவரம் அனைத்தும் நாம் மட்டுமல்ல, நாடும் அறிந்திருக்கிறது.

இத்தனைக்கும் நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகம் மற்ற மாவட்டங்களைப் போன்று ஓரளவு வசதிகூட பெற்றதுமல்ல. எனினும் திராவிட இனத்தின் பண்புக்கேற்ப நாஞ்சில் மாவட்டத் தி. மு. கழகம், மாநில மாநாட்டுக்குத் தனது பங்கீட்டினை அளித்தே தீருவதென்ற உறுதிப்பாட்டினையும், கடமை யுணர்ச்சியையும் கொண்டு அதற்கு ஆவன செய்ய முனைந்துள்ளதைக் கண்டு உண்மையிலேயே பெருமையும் பூரிப்புமடைகிறோம்.

இதனை நிறைவு பெறச் செய்வதற்கான முயற்சிகளில் 21—10—55 அன்று நாகர்கோயிலில் அறிஞர் அண்ணா அவர்களைக் கொண்டு சிறப்புக் கூட்டம் ஒன்று நடத்த முடிவு செய்துள்ளனர். எனவே நாஞ்சில் மாவட்டத்திலுள்ள கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பொதுமக்களும் சிறப்புக் கூட்டத்திற்கு பெருந் திரளாகச் சென்று நாஞ்சில் மாவட்ட தி.மு. கழகப் பங்கீட்டுத் தொகையை நிறைவுபெறச் செய்ய வேண்டுகிறோம்.

நடக்க இருப்பவை

பாபநாசம் : அண்ணா வருகை

16–10–55 ஞாயிறு மாலை 7-மணிக்கு பாபநாசம் திராவிட முன்னேற்றக் கழக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறும். அறிஞர். அண்ணா தோழர்கள் அ. பொன்னம்பலனார் சென்னை மாவட்ட தி. மு. கழக முன்னாள் செயலாளர் கே. கோவிந்தசாமி பேசுவர்.

துறையூர்

தி. மு. கழக 7-வது ஆண்டு விழா 16-10-55 ஞாயிறு காலை 9-மணிக்கு பாரதி தியேட்டரில் பொ. சண்முகம் தலைமையில் மாபெருங் கூட்டம் நடைபெறும். கவிஞர். சண்ணதாசன், து. ப. அழகமுத்து பேசுவர். இசை முரசு நாகூர் அனிபா குழுவினரின் இசை விருந்தும் உண்டு.

ஆம்பூர்

16–10–55 ஞாயிறு மாலை 6-மணிக்கு ஆம்பூர் முகமதலி திடலில் தி. மு. கழக சார்பில் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் டி. கே. சீனிவாசன் சொற்பொழி வாற்றுவார்.

மீர்சாகிப்பேட்டை

16—10—55, ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு 43-வது வட்ட தி.மு. கழகப் பொது உறுப்பினர்களின் கூட்டம் செயலாளர் மு. புரட்சிமணி இல்லத்தில் நடைபெறும் உறுப்பினர்கள் தவறாது வருமாறு செயலாளர் இதன் மூலம் கேட்டுக்கொள்கிறார்.

புகளூர்

18—10—'55 செவ்வாய்க் கிழமை மாலை 6-30 மணிக்கு புகளூர் சர்க்கரை ஆலைக்கு அருகிலுள்ள செம்படா பாளையம் மைதானத்தில் தி. மு. கழக பொதுக் கூட்டம் நடைபெறும்

அறிஞர் அண்ணா, தோழர், எ. பி. தர்மலிங்கம் சொற்பொழிவாற்றுவர் புகளூர் சர்க்கரை ஆலை தொழிலாளர்கள், சிப்பந்திகள் சார்பில் மாநில மாநாட்டிற்கு நிதியளிக்கப்படும்.

திருப்புத்தூர் (ராமநாதபுரம்)

20—10—55 வியாழன் மாலை 2-30 மணிக்கு கருணாநிதி படிப்பகத் திறப்பு விழா, மாலை 5-30மணிக்கு பொதுக்கூட்டம் ஆகிய நிகழ்ச்சிகள் சிவகெங்கை ரோட்டுத் திடலில், மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து தலைமையில் நடைபெறும் அறிஞர் அண்ணா தோழர் அ. பொன்னம்பலனார் பேசுவர்.

திருமணம்

21—10—55 காலை 7-மணிக்கு ஆம்பூரில் தோழர். சக்ரவர்த்தி—பத்மா ஆகியோருக்கு தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர் முசனவ ஆர். எஸ். பாண்டியன் மற்றும் பலர் பேசுவர்.

சேலம்மாவட்ட தி.மு.க. கூட்டம்

சேலம் மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் 23-10-55-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை சேலம் கோயமுத்தூர் லாட்ஜில் (சாந்திநிகேதன்) பகல் 3-மணிக்கு நடைபெறும். கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கோரப்படுகிறது.

பொருள்: பொதுக்குழு உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல்.

திருத்தம்

சென்ற வாரம் திராவிடப் பூங்கா—கட்டுரையில் மூன்றாவது கலத்தில் நீரர் என்றிருப்பதை நீரர் எனக் கொள்ள வேண்டுகிறோம். —ஆ-ர்.

புதிய மாநில எல்லைகள்.

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள்

இந்தியத் துணைக் கண்டத்தின் மாநில எல்லைக்கோடுகளைத் திருத்தி அமைப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த மாநில புனரமைப்புக் குழுவினர் செய்துள்ள சிபாரிசுகள் அடங்கிய அறிக்கை அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்தைவிட்டு வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் வெளியேறியதும், பரவலாக 600-க்கும் மேற்பட்டிருந்த 'இந்திய சுதேச சமஸ்தானங்கள்' என்றழைக்கப்பட்ட சிறிய—பெரிய துண்டுகளாகக் கிடந்த நிலப்பரப்புக்கள் எல்லாம் ஏற்கனவே இருந்த மாநிலங்களுடன் இணைக்கப்பட்டு 27 மாநிலங்களாக இதுகாறும் இயங்கி வருகின்றன.

குழுவினரின் சிபாரிசுகளின்படி, இந்த 27 மாநிலங்களும் கூட்டலும் — குறைத்தலுக்கும் உட்பட்டு 16 மாநிலங்களாக அமைவதுடன், மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் அமையும் மூன்று மாநிலங்களும் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

குழு சிபாரிசு செய்துள்ளபடி, சென்னை கேரளம், கர்நாடகம், ஐதராபாத், ஆந்திரம், பம்பாய், விதர்பா, மத்திய பிரதேசம், இராஜஸ்தான், பஞ்சாப், உத்தரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்கம், அசாம், ஒரிசா, ஜம்மு-காஷ்மீர் ஆகிய 16 மாநிலங்களும், டில்லி, மணிப்பூர், அந்தமான் ஆகிய மூன்று மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாக பூமிகளும் அமைகின்றன.

இப்படி அமைகிற இந்த மாநிலங்களிடையே அரசியல் சட்ட ரீதியான வேறுபாடுகள் எதுவும் இருக்கமாட்டா; இப்போதிருக்கிற 'ஏ', 'பி', 'சி', பிரிவுகள் என்ற மாநில அமைப்பு வேறுபாடுகள் ஒழியும்.

குழுவினர் மாநில புனரமைப்பு பற்றி தாங்கள் செய்துள்ள சிபாரிசுகளைப் பற்றிக் குறிப்பிடுகையில், இந்தியாவின் 'தேசிய ஒற்றுமையை மனதில் கொண்டே' கருத்துக்களைப் பரிசீலித்ததாகத் தெரிவிக்கின்றனர்!

இப்போதுள்ள மாநில அமைப்புகளான பெப்சு, இமாசலப் பிரதேசம், மத்திய பாரத் விந்தியப் பிரதேசம், போபால் அஜ்மீர், திரிபுரா ஆகியவை, சிபாரிசுகளின்படி அமைகிற 16 மாநிலங்களுக்குள் இணைக்கப்பட்டுவிடுவதால், தனியாக இயங்கும் நிலை அற்று விடுகின்றன.

சையத் பாசல் அலியைத் தலைவராகவும், சர்தார் கே. எம். பணிக்கர், எச். என். குன்ஸ்ரு ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட இந்த மாநில புனரமைப்புக் குழு, கடந்த 1953 டிசம்பர் 23-ந் தேதியன்று இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டதாகும்.

குழுவினர் செய்துள்ள சிபாரிசுகள் தென்னாட்டிலும் — வடநாட்டிலுமாகப் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது.

குழு அமைவதற்கு முன்பும், குழு அமைந்த பின்பும், இந்தியத் துணைக் கண்டத்தின் புல பாகங்களிலும், மொழிவழி மாநில அமைப்பு வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டங்களும், கிளர்ச்சிகளும், போராட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.

பஞ்சாப் மொழி வழி மாநிலம் அமையாவிட்டால், வரி கொடா இயக்கம் போன்ற பெரும் போராட்டங்கள் நடத்தப்படும் என்று அறைகூவல் தந்திருந்த அகாலி தளத் [illegible]வர் மாஸ்டர் தாராசிங், குழுவினரின் சிபாரிசுகளைக் கண்டு அதிர்ச்சியுற்றிருப்பதாகத் தெரிகிறது.

1947-ல் ஏற்பட்ட விபரீதத்தை விடப் பெரிய விபரீதம் ஏற்பட்டுள்ளது என்றும், மாநிலக் குழு அறிக்கை சீக்கிய உலகத்தின் முகத்தையே அழித்து விடுகிறது என்றும், சீக்கியர் எல்லோரும் ஒன்று திரண்டு இதனை எதிர்க்க வேண்டுமென்றும் அறிவித்திருக்கிறார் தாராசிங்!

சம்யுக்த மராட்டியம் அமையாவிடில், பெரும் கொந்தளிப்பும் குழப்பமும் ஏற்படும் என தேசிய வீரர் சங்கர ராவ்தேவ் எச்சரித்திருக்கிறார்.

பெல்லாரி மீண்டும் ஆந்திரருக்குத் தரப்பட்டிருப்பது கன்னடியருக்குக் கோப மூட்டியிருப்பதாகத் தெரிகிறது.

திரு-கொச்சியில் உள்ள 9 தமிழ் வட்டங்களில், 5 வட்டங்கள் மட்டுமே தாய்த் தமிழகத்துடன் இணைபவும், எஞ்சியவை, புதிய கேரளத்தில் இருக்க வேண்டும் எனவும் குழு சிபாரிசு செய்திருப்பதும் அந்தப் பகுதி மக்களின் அதிருப்திக்கு ஆளாகியுள்ளதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

ஆந்திர, சென்னை மாநிலங்களிடையே உள்ள சித்தூர் எல்லைத் தகராறு, இரு மாநிலங்களின் முடிவுக்குமே விடப்பட்டிருக்கிறது.

விசால ஆந்திரம் அமையாதது—பலருக்கு ஏமாற்றம்தான் என்று தெரிகிறது.

இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் வானொலி மூலம் இது குறித்துப் பேசுகையில், மக்கள் சிபாரிசுகளைக் குறித்து பரபரப்படையத் தேவை இல்லை எனவும், இந்த சிபாரிசுகள் குறித்து மாநில சட்டசபைகள் விவாதித்த பின்னர், மக்கள் சபைக்குத்தான் முடிவெடுக்கும் அதிகார மிருப்பதாகவும் சிபாரிசுகள் கண்ணியமாகவும், அமைதியாகவும், முழுவதுமாகவும், ஜனநாயக அடிப்படையிலும் நோக்குமாறும் கேட்டுக் கொண்டிருக்கிறார்,

சிபாரிசுகளில் சில அவருக்கு ஆச்சரிய மூட்டியிருக்கிறதாம்!

பல கட்சியினரும் குழுவினர் அறிக்கை குறித்துத் தீவிரமாக பரிசீலித்து வருகின்றனர்.

குழுவின் சிபாரிசுகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது :—

சென்னை :

இந்த மாநிலம் கீழே கூறப்பட்டுள்ள மாறுதலுக்குட்பட்டு, தற்போதுள்ள பிரதேசங்கள் அடங்கியதாக இருக்கவேண்டும். அந்த மாறுதல்களாவன :—

(அ) தற்போது திருவாங்கூர்–கொச்சி மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்துவரும் அகஸ்தீசுவரம், தோவாளை, கல்குளம், விளவன்கோடு, செங்கோட்டை ஆகிய ஐந்து தாலுகாக்களும் சென்னை மாநிலத்திற்கு மாற்றப்பட வேண்டும்;

(ஆ) மலபார், தென் கன்னடம் மாவட்டங்களும், கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள கொள்ளேகாலம் தாலுகாவும் சென்னை மாநிலத்திலிருந்து பிரிக்கப்படவேண்டும்.

மேலே குறிப்பிட்ட ஐந்து தாலுகாக்களையும் சென்னையுடன் சேர்ப்பதானது, பூமி அமைப்புத் தொடர்ச்சி காரணமாகவும், மொழி, கலாச்சாரத் தொடர்புகள் காரணமாகவும் நியாயமானதாகும். அந்தப் பிரதேச வாசிகள் தெளிவாக வெளியிட்டுவந்துள்ள கோரிக்கையையும் இது பூர்த்தி செய்து வைப்பதாக இருக்கும்.

கேரளம் :

புதிதாக அமைக்கப்படும் கேரள மாநிலம் பின்வரும் பிரதேசங்கள் அடங்கியதாக இருக்கவேண்டும் :—

(அ) சென்னைக்கு மாற்றிவிட உத்தேசிக்கப்பட்டுள்ள ஐந்து தாலுகாக்கள் நீங்கலாக, தற்போதுள்ள திருவாங்கூர்-கொச்சி மாநிலம்;

(ஆ) மலபார் மாவட்டம் (கொச்சின் கோட்டையும் லட்சத் தீவுகளும் உட்பட்டது), தென் கன்னடம் மாவட்டத்திலுள்ள காசர்கோடு தாலுகா, அமின்டிங் தீவுகள் ஆகியவை.

கர்நாடகம் :

கர்நாடக மாநிலம் பின்வரும் பிரதேசங்கள் கொண்டதாக அமைக்கப்பட வேண்டும் :—

(அ) தற்போதைய மைசூர் மாநிலம்-பெல்லாரி மாவட்டத்திலுள்ள பின் வரும் பகுதிகள் நீங்கலாக—அப்பகுதிகளாவன : சிருகுப்பா தாலுகா, ஹோஸ்பெட் தாலுகா, மல்லாபுரம் உப தாலுகாவில் துங்கபத்ரா, அணைத் திட்டத்தின் அணைக்கட்டும், மடைகளும் அமைந்துள்ள ஒரு சிறு பகுதி;

(ஆ) பம்பாய் மாநிலத்தில் கன்னட மொழி பேசப்பட்டு வரும் தார்வார், பீஜபூர், வட கன்னடம், பெல்காம் (பெல்காம் மாவட்டத்திலுள்ள சந்த்காட் தாலுகா நீங்கலாக) ஆகிய நான்கு மாவட்டங்கள்;

(இ) ஐதராபாத்திலிருந்து ரெய்ச்சூர், குல்பர்கா மாவட்டங்கள்;

(ஈ) சென்னையிலிருந்து தென் கன்னடம் மாவட்டம் (காசர்கோடு தாலுகா நீங்கலாக);

(உ) சென்னை மாநிலத்தின் கோயமுத்தூர் மாவட்டத்திலிருந்து கொள்ளேகாலம் தாலுகா;

(ஊ) குடகு;

பெல்லாரி மாவட்டத்தின் தென் பகுதியை கன்னடத்திலிருந்து ஆந்திரத்துக்கு மாற்றுவது பற்றி, இந்தக் கோரிக்கைக்கான எல்லாக் காரணங்களையும் நன்கு ஆராய்ந்து பார்த்த பிறகே, சிபாரிசு செய்யப் பட்டிருப்பதாக அறிக்கை கூறுகிறது. துங்கபத்திரா அணைத் திட்டம் ஆந்திரத்துக்கு மிகவும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதும், இந்தப் பிரதேசத்தில் இரு மொழிகளும் பேசப்பட்டு வருவதும், ஓரளவு மாறியுள்ள இன்றைய சூழ்நிலையில், நீதிபதி மிஸ்ராவின் தீர்ப்பை புனர் பரிசீலனை செய்வதை நியாயமாக்கும் காரணங்களுள் ஒரு சிலவாகும் என்று, குழு கூறுகிறது.

ஐதராபாத்:

பொது மக்களின் கோரிக்கைக்கு இணங்க பெரிய மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்டு வரும்போது, ஐதராபாத் மாநிலத்தை தற்போதுள்ளபடியே வைத்துக் கொண்டிருப்பதென்பது முடியாது; ஐதராபாத், செகந்தராபாத் ஆகியவற்றிலுள்ள உருது பேசும் மக்களின் விசேடமான தேவைகளைக் கருத்தில் கொண்டு செய்யப்பட்டுள்ள ஒரு சில ஏற்பாடுகளுக்குட்பட்டு, ஐதராபாத் மாநிலம் பின்வரும் முறைகளில் மாற்றியமைக்கப்பட வேண்டும் :—

ரெய்ச்சூர், குல்பர்கா மாவட்டங்களுடன் மராத்வாடா மாவட்டங்களையும் ஐதராபாத் மாநிலத்திலிருந்து பிரித்துவிட வேண்டும்; எஞ்சிய பிரதேசம் ஐதராபாத் என்றே இனியும் அழைக்கப்பட்டு வர வேண்டும்; இந்தப் புதிய மாநிலம் பின்வரும் பிரதேசங்கள் அடங்கியதாக இருக்க வேண்டும் :—

தற்போதைய ஐதராபாத் மாநிலத்தின் தெலுங்கு மாவட்டங்கள்—அவையாவன: மஹ்பூப் நகர், நல்கொண்டா, வாரங்கல் (கம்மம் உட்பட) கரீம்நகர், அடிலாபாத், நைஜாமாபாத், ஐதராபாத் மெடாக்; பிதார் மாவட்டம், நல்கொண்டா மாவட்டத்தில் ஆந்திராவின் கிருஷ்ணா மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருந்துவரும் முனகாலா திட்டுப் பிரதேசம்.

எஞ்சிய ஐதராபாத் மாநிலம், 1961-ம் ஆண்டிலோ, அந்த ஆண்டு வாக்கிலோ நடைபெறக் கூடிய பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு, அந்த மாநிலத்தின் சட்டசபை ஐதராபாத் மாநிலம் ஆந்திரத்துடன் சேருவதை, மூன்றில் இரண்டு பகுதி

16 மாநிலங்கள் -- 3 மத்திய ஆட்சிப் பகுதிகள்

வோட்டுக்களால் ஆதரிக்குமேயானால், ஆந்திரத்துடன் இணைந்து கொள்ளலாம்.

ஆந்திரம் :

ஆந்திர மாநிலம் கீழே கூறப்பட்டுள்ள சாதாரண ஒரு சில மாறுதல்களுக்குட்பட்டு, தற்போதுள்ளபடியே இப்போதைக்கு இருந்து வரவேண்டும் :—

பெல்லாரி மாவட்டதிலிருந்து சிருகுப்பா, பெல்லாரி, ஹோஸ்பெட் தாலுகாக்களும், மல்லாபுரம் உப-தாலுகாவின் ஒரு பகுதியும் ஆந்திராவுக்கு மாற்றப்பட வேண்டும்.

கிருஷ்ணா மாவட்டத்தைச் சேர்ந்த முனகாலா திட்டுப் பிரதேசம், ஏற்கனவே கூறப்பட்டபடி, ஐதராபாத்துக்கு மாற்றப்பட வேண்டும்.

சென்னை நகரம் விஷயத்தில் தற்போதுள்ள நிலைமையில் மாறுதல் எதுவும் கூடாது; சென்னை நகரத்தின் எதிர்காலம் இறுதியாக முடிவு செய்யப்பட்டு விட்டதாகவே கருதப்பட வேண்டும்.

பம்பாய் :

பம்பாய் மாநிலம், குழுவினர் பின்பற்றி வந்துள்ள பொதுக் கோட்பாடுகளுக்கிணங்க, ஒரே மொழி பேசப்படும் பிரதேசத் தொகுதியாக அல்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படும் கலப்புப் பிரதேசமாகவே நீடித்திருக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின் மூலம், பம்பாயின் எதிர்காலம் பற்றிய பிரச்சனையும் சரியானபடி தீர்த்துவைக்கப்பட்டுவிடும்.

'புதியதாக அமைக்கப்படும் பம்பாய் மாநிலமானது, தற்போதைய பம்பாய் மாநிலத்திலிருந்து' பானுஸ் கந்தா மாவட்டத்தில் அபூ ரஸ்தா தாலுகாவும் கன்னடம் பேசப் பட்டுவரும் மாவட்டங்களான தார்வார், பீஜபூர், வடகன்னடம் பெல்காம் (சாந்த்காட் தாலுகா நீங்கலாக) ஆகியவற்றை நீக்கிய பிற எஞ்சியிருக்கும் பிரதேசத்துடன் கூட பின்வரும் பிரதேசங்களும் சேர்ந்ததாக இருக்க வேண்டும் :—

(அ) 'ஐதராபாத்தில் மராத்தி பேசப்படும் மாவட்டங்கள்—அதாவது உஸ்மானாபாத், பீர், அவுரங்கபாத், பர்பாணி, நாண்டெட்;

(ஆ) சௌராஷ்டிரம்;

(இ) கட்ச்.

விதர்ப்பம் :

மத்திய பிரதேச மாநிலத்தின் மராத்தி பேசப்படும் மாவட்டங்களான புல்தானா, அகோலா, அமராவதி, யோட்மால், வார்தா, நாகபுரி, பாந்த்ரா, சந்தா ஆகியவை அடங்கியதான புதிய மாநிலமொன்று, விதர்ப்பம் என்ற பெயரில் அமைக்கப்பட வேண்டும்.

மத்தியப் பிரதேசம் :

விதர்ப்ப மாநிலம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, பின் வரும் பிரதேசங்கள் கொண்ட புதிய மாநிலமொன்று ஏற்படுத்தப்படவேண்டும்; இந்தப் புதிய மாநிலம் மத்தியப் பிரதேசம் என்ற பெயர்கொண்டதாக இருக்கலாம் :—

(அ) மத்தியப் பிரதேசத்தில் எஞ்சியுள்ள 14 வட்டங்கள்;

(ஆ) போபால் முழுவதும், விந்தியப் பிரதேசம் முழுவதும்;

(இ) மத்திய பாரத்—மண்ட்சார் மாவட்டத்தின் ஸுனேல் திட்டுப் பிரதேசம் நீங்கலாக;

(ஈ) இராஜஸ்தானில் கோடா மாவட்டத்தின் ஸிரோஞ்ச் சப்-டிவிஷன்.

போபால், விந்தியப் பிரதேசம், மத்திய பாரத் ஆகிய மாநிலங்கள் மூலவளம் நிறைந்த பெரியதொரு பிரதேசத்துடன் சேருவதால் பயன்பெறக் கூடும். இந்தப் புதிய மாநிலத்தில் ஜபல்பூர் நகரம் மத்தியமானதொரு இடத்தில் இருக்குமாகையால், தலைநகராகக் கொள்வதற்கு ஏற்றதாக இருக்கும்.

இராஜஸ்தான் :

புதிதாக ஏற்படுத்தப்படும் மத்தியப் பிரதேச மாநிலத்தில் ஸிரோஞ்சைச் சேர்ந்த பிறகு, இராஜஸ்தான், எஞ்சியுள்ள பிரதேசமும், புதிதாகச் சேர்க்கப்படும் பின்வரும் பிரதேசங்களும் கொண்டதாக இருக்கவேண்டும் :—

(அ) அஜ்மீர்;

(ஆ) பம்பாயில் பனுஸ்கந்தா மாவட்டத்தின் அபூ ரஸ்தா தாலுகா, மண்ட்சார், மாவட்டத்தின் சுனேல் திட்டுப் பிரதேசம், பஞ்சாபைச் சேர்ந்த ஹிஸ்ஸார் மாவட்டத்தின் லோஹாரு உப தாலுகா.

பம்பாயிலிருந்து பனுஸ்கந்தா மாவட்டத்தின் அபூ ரஸ்தா தாலுகாவை இராஜஸ்தானுக்கு மாற்றுவது, மொழிப் பற்றுதல் காரணமாகவும், அந்தப் பிரதேச மக்கள் ஓயாமல் வற்புறுத்தி வந்திருப்பதாலும் நியாயமானதேயாகும்.

பஞ்சாப் :

பஞ்சாபைப் பிரிப்பதற்கும், பெப்சுவையும், இமாசலப் பிரதேசத்தையும், தற்போதுள்ளபடியே வைத்திருப்பதற்கும் ஆதரவு காட்டி வற்புறுத்தப்பட்டு வந்துள்ள மொழி பற்றிய காரணங்களையும், பிறவற்றையும், கமிஷன் கவனமாய் ஆராய்ந்து பார்த்தது. இந்தக் கோரிக்கைகளில் எதையும் ஏற்றுக்கொள்வது கடினமென்று குழு கருதுகிறது. மொழியின் தன்மையையும், பஞ்சாபில் போக்குவரத்து சாதனத்தேவைகளையும் கருத்தில் கொண்டு பார்த்தால், பஞ்சாபி பேசும் மாநிலமொன்றை ஏற்படுத்துவதற்கு நியாயமே இல்லை; அம்மாதிரியானதொரு மாநிலத்தை ஏற்படுத்துவதால் இந்தப் பிரதேசத்தின் பொருளாதார வாழ்க்கை சீர்குலைந்துவிடக்கூடும். பஞ்சாபி பேசப்படும் மாநிலம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை முக்கியமாக இரண்டு விஷயங்களால் அடி பட்டுப் போய்விடுகிறது; முதலாவதாக, அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பொதுவான ஆதரவு இதற்கு இல்லை; இரண்டாவதாக, சச்சரவுக்குக் காரணமாக இருந்த எந்த விஷயங்கள் காரணமாக, பஞ்சாபி பேசப்படும் தனி மாநிலம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுந்ததோ, அந்த விஷயங்களில் ஒன்று கூட இதனால் விலக்கப்பட்டுவிடப் போவதில்லை, அத்தகையதொரு மாநிலத்தை ஏற்படுத்துவதால், மொழிப் பிரச்சினையோ, வகுப்புப் பிரச்சினையோ தீர்ந்துவிடப் போவதில்லை; அதற்கு மாறாக, தற்போதிருந்துவரும் உணர்ச்சிகளை மேலும் வளர்ப்பதாகவே அது இருக்கும்.

பெப்சுவும், இமாசலப் பிரதேசமும் மிகச் சிறியவையாக இருப்பதால் தனித் தனியே இருந்துவர முடியாது. பெப்சு இமாசலப் பிரதேசம் ஆகியவற்றிற்கும், தற்போதைய பஞ்சாப் மாநிலத்துக்கும் இடையே இருந்து வரும் பொருளாதார, நிர்வாகத் தொடர்புகளைக் கவனிக்கும்போது, இந்த இரண்டு மாநிலங்களையும் பஞ்சாப் மாநிலங்களையும் இணைப்பதே நியாயமாகும்.

புதிய பஞ்சாப் மாநிலம் பெப்சுவும், இமாசலப் பிரதேசமும் அதனுடன் சேர்ந்த பிறகு, நன்கு இணைந்ததொரு பிரதேசமாக இருக்கும்; இந்தப் பிரதேசத்திலுள்ள பல்வேறு சர்க்கார்கள் தற்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கும் தீவிரமான அபிவிருத்தித் திட்டங்களைச் சரிவர நிறைவேற்றி வைக்கக்கூடிய நிலைமையில் இருக்கும்.

உத்திரப் பிரதேசம் :

உத்திரப் பிரதேசத்தைப் பிரிப்பதற்கான முகாந்திரமெதுவும் இல்லை; இந்த மாநிலம் தற்போதுள்ளபடியே இருந்துவர வேண்டும்.

பீகார் :

தென் பீகாரில் ஜார்கண்ட் மாநிலமொன்றை ஏற்படுத்துவதற்கு அவசியமெதுவுமில்லை; அது விரும்பத்தகுந்ததுமல்ல; ஆனால் இந்தப் பிரதேசத்தின் பிரத்தியேகமான தேவைகள் கவனிக்கப்பட வேண்டும்.

மேற்கு வங்காளம் :

மேற்கு வங்காளத்தின் தொடர்பு அற்றிருக்கும் வட பகுதிக்கும், அந்த மாநிலத்தின் பிற பகுதிகளுக்குமிடையே பூமி அமைப்பு ரீதியான தொடர்பு இருப்பது அவசியமாகிறது; இதற்கான ஏற்பாட்டைச் செய்தாக வேண்டும். ஆகவே, மஹாநந்தா நதியின் கிழக்குப் பக்கத்தில் பூர்னியா மாவட்டத்தின் ஒரு பகுதியை, இதற்கு அவசியமான குறைந்தபட்ச பிரதேசமாக இருப்பதால், பீகாரிலிருந்து மேற்கு வங்காளத்துக்கு மாற்றிவிட வேண்டும்.

அசாம் :

அசாம், அதனுடைய பூகோள ரீதியான நிலைமையையும் மக்களின் பூர்வீகக்கலாச்சார வரலாற்றையும் கருதி கலப்பு மொழி மாநிலமாகவே நீடித்திருக்க வேண்டியது அவசியமாகிறது அசாமில் மலை ராஜ்யமொன்றை ஏற்படுத்துவது காரிய சாத்தியமானதல்ல; மேலும், அசாமின் தனித் தன்மைகளையும், சூழ்நிலைகளையும் கவனிக்கும்போது, தனியான மலை ராஜ்யமொன்றை ஏற்படுத்துவதற்கு அவசியமும் இல்லை; ஆனபோதிலும் மலை ஜில்லாக்களின் அபிவிருத்தியில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்;

திரிபுரா, அசாமில் சேர்க்கப்படவேண்டும்.

வடகிழக்கு எல்லை ஏஜென்சி சம்பந்தமாகத் தற்போது இருந்து வரும் ஏற்பாடு நீடித்திருந்து வர வேண்டும்

ஒரிசா :

1936-ம் வருடம், நீண்ட காலம் விவரமான பரிசீலனை நடத்திய பின்னர், நிர்ணயிக்கப்பட்ட ஒரிசாவின் எல்லைகளில் எவ்வித மாறுதல்களும் செய்யப் படவேண்டிய தேவை இல்லை.

ஜம்மு-காஷ்மீர் :

ஜம்மு-காஷ்மீர் பற்றி எவ்வித சிபாரிசுகளும் செய்யப்படவில்லை இதுவரை பிரஸ்தாபிக்கப்படாத யூனிட்டுகளும், பகுதிகளும் மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்திலிருந்துவரும், இவைகள் பிரதேசங்கள் (டெரிட்டரிகள்) என்றழைக்கப்படும்.

டில்லி :

டில்லி மத்திய சர்க்காரின் இருப்பிடமாகத் தொடர்ந்து இருக்க வேண்டுமானால், அது சரியான கொள்கையை அடிப்படையாகக் கொண்டதும், காரியாம்சத்தில் நிர்வாக சாத்தியமானதுமோர் மாதிரியில் அமைக்கப்பட வேண்டும்.

மணிப்பூர்

தற்காலத்துக்கு மணிப்பூர் மத்திய சர்க்காரின் நிர்வாகத்துக்குட் பட்ட பிரதேசமாக இருக்க வேண்டும். கடைசியாக இதை அசாம் மாநிலத்துடன் இணைப்பதே குறிக்கோளாக இருக்கவேண்டும்.

அந்தமான், நிக்கோபார் தீவுகள் :

அந்தமான், நிக்கோபார் தீவுகள் பிரச்சனையில் இப்பொழுதுள்ள நிலைமையே மேலும் நீடித்து வர வேண்டும்.

உத்தேச அங்கங்கள், அவைகளின் பிரதேசப் பரபரப்பு, மக்கட்தொகை முதலியன பின்வருமாறு இருக்கும் :—

மாநிலங்கள்

	பரப்பளவு (சதுர மைல்)	மக்கட் தொகை (லட்சக் கணக்கில்)
சென்னை	50,170	300
கேரளம்	14,980	136
கர்நாடகம்	72,730	190
ஐதராபாத்	45,300	113
ஆந்திரம்	64,950	209
பம்பாய்	1,51,360	402
விதர்ப்பம்	36,880	76
உத்திரப் பிரதேசம்	1,71,200	261
இராஜஸ்தான்	1,32,300	160
பஞ்சாப்	58,140	172
உத்திரப் பிரதேசம்	1,13,410	632
பீகார்	66 520	385
மேற்கு வங்காளம்	34,590	265
அசாம்	89.040	97
ஒரிசா	60,140	146
ஜம்மு—காஷ்மீர்	92,780	44

மத்திய நிர்வாகப் பிரதேசங்கள்

டில்லி	578	17,44,072
மணிப்பூர்	8,268	5,77,635
அந்தமான்-நிக்கோபார் தீவுகள்	3,215	30,971

அடுத்த வாரம்

மாநில புனரமைப்புக் குழுவின் முழுவிவரம் இவ்வாரம் நமது திராவிடனில் வெளியிடப்பட்டிருப்பதால், சுல்தானா ரசியா—கேள்வி பதில் முதலியன அடுத்த வாரம் வழக்கம் போல வெளிவரும்.

அத்துடன் மாநில புனரமைப்புக் குழுவின் தீர்ப்பு குறித்து நமது கருத்தும் அடுத்த வாரம் வெளிவரும்.

—ஆசிரியர் 'திராவிடன்'

மாநில புனரமைப்புக் குழுவின் முடிவு — மற்றுமோர் படப்பிடிப்பு

"நேருவின் மாநிலம் நீளுகிறது!"

●

இந்தியத் துணைக்கண்டத்தில் இனி நேருவின் மாநிலமாகிய உத்திரப் பிரதேசம்தான் மிகப் பெரிய மாநிலமாக இயங்கிவரும். இந்திய அரசியலாரால் நியமிக்கப்பட்ட மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கைக்கேற்ப, உத்திர பிரதேசம் 6 கோடியே 32 லட்சம் மக்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக பம்பாய் மாநிலம் 4 கோடி மக்களைக் கொண்ட இரண்டாவது பெரிய ராஜ்யமாகவும், பீகார் மாநிலம் 3 கோடியே 85 லட்சம் மக்களையும், சென்னை மாநிலம் 3 கோடி மக்களைக் கொண்டதாகவும் விளங்கும்.

மாநில புனரமைப்புக் குழுவினரின் தீர்ப்பைப்பற்றி பெருமளவுக்குக் கண்டனங்களும் அதிலும் குறிப்பாக மராட்டிய—மைசூர்—சீக்கிய—மக்களின் கடும் எதிர்ப்பும் காட்டப்பட்டு வருகிறது.

தென்னாட்டைப் பொறுத்தவரை ஐதராபாத்தின் தெலுங்குப் பகுதிகளை ஐதராபாத்திலேயே ஒட்ட வைத்துவிட்டு, மைசூருக்கு அளித்திருந்த பெல்லாரியை ஆந்திராவுடன் மீண்டும் சேர்க்க வேண்டுமென்று தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

அதுபோலவே கோவை மாவட்டத்திலுள்ள கோள்ளேகாலம் தாலூக்காவை கன்னட ராஜ்யத்திற்கு அர்ப்பணம் செய்யுமாறும் திரு—கொச்சி தமிழ்ப் பகுதிகளாகிய தேவிகுளம், பீர்மேடு தாலூக்காக்களை கேரள ராஜ்யத்துடன் சேர வேண்டுமென்றும் குழுவினர் குறிப்பிட்டிருக்கின்றனர்.

ஆந்திர — தமிழ்ப் பகுதி விவகாரம் இரு ராஜ்ய சர்க்காரே பேசித் தீர்த்துக் கொள்வர் என்று குழுவினர் மிக நாசுக்காக மழுப்பி விட்டனர்!

புனரமைப்புக் குழுவின் அறிக்கைப்படி உத்திர பிரதேசம்தான் இனி பெரிய ராஜ்யமாக—முத்தண்ணுக்கள் மாநிலமாக—விளங்கும். அடுத்தபடியாக பம்பாய்! இந்தியத் துணைக்கண்டம் 16 மாநிலங்களாகவும் 33 கோடி மக்கள் கொண்டதாகவும் இருக்கிறதென்றால் இந்த இரு மாநிலங்களில் சேர்த்து ஏறத்தாழ 11 கோடி மக்கள் —(இந்தியத் துணைக்கண்டத்தின் மக்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதி) வாழ்வர்.

ஆக, இந்தக் கணக்குப்படி பார்த்தால், டெல்லிப் பாராளுமன்றத்திற்கு மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அந்த அளவுக்கு உயர்ந்தே தீரும். இந்த இரு மாநிலங்களுடன் மற்ற வடநாட்டு மாநிலங்களும் சேர்த்து விட்டால் தென்னாட்டு மாநிலங்களோ அல்லது மாநில உறுப்பினர்களோ தலைகீழாக நின்றாலும் வடநாட்டு ஆதிக்கத்தை (இந்திய அரசியல் சட்டப்படி) அசைக்க முடியாத நிலை ஏற்படக்கூடுமென்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அதிலும் இந்திமொழி ஆதிக்கவெறி தலைவிரித்தாடுவதற்கு "வேப்பிலை" அடிப்பதும் உத்திரப் பிரதேசமேயாகும்! அதுமட்டுமா ஆசியாவின் ஜோதி—அயல்நாட்டிலாகா பொறுப்பாளர்—பிரதம மந்திரி நேரு பண்டிதர் உத்திரபிரதேசத்துக்காரர்! உள்நாட்டிலாகாவின் லகானைப் பிடித்திருக்கும் தோழர். பந்த் அவர்களும் உ. பி.காரர்தான்! இந்தியப் பேரரசின் ஆட்சிபீடத்தில் முக்கிய இடங்களைப் பிடித்திருப்பவர்கள் உ. பி. மாநிலத்தவர்களே யாவர்.

நேருவின் சொந்த மாநிலமாகிய உத்திரப் பிரதேசம் இவ்வாறு நீண்டிருப்பதின் அபாயத்தை குழுவின் உறுப்பினரான சர்தார் பணிக்கர் அவர்களே சுட்டிக்காட்டி யிருக்கிறார்.

திருத்தியமைக்கப்பட்ட மாநிலங்களின் நிலப்பரப்பு, மக்களின் எண்ணிக்கை ஆகியவைகள் எவ்வாறிருந்தபோதிலும் அம்மாநிலங்கள் ஒவ்வொன்றும் தனி உரிமையுடனாவது இயங்குமாயெனில் அதற்கு வழி வகை ஒன்றும் காணோம்.

இக்குழுவினரின் இரண்டு ஆண்டு கால பணியினால் ஏதாவது உருப்படியான யோசனை கூறப்பட்டிருக்கிறதென்றால், "ராஜப்பிரமுகர்கள்" என்ற பதவிகள், அதன பேரால் முன்னாள் சமஸ்தானாதிபதிகள் பெற்று வந்த கொழுத்த சம்பளம், மற்ற சலுகைகள் ஆகியவைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதேயாகும்.

இக்குழுவினரின் தீர்ப்பைக் குறித்து நாடெங்கும் கண்டனங்களும் அது போலவே அரசியலாரின் அடக்குமுறை ஜபர்தஸ்தும் காணப்படுகின்றன. அரசியல் கட்சிகள் பல தமது கருத்தைத் தெரிவித்துள்ளன. அதற்கேற்ப தி. மு. கழகத்தின் எண்ணத்தையும் மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

— வீரன்

நாஞ்சில் மாவட்டத்தில்

அறிஞர் அண்ணா

மாநில மாநாட்டு நிதிக்கு சிறப்புச் சொற்பொழிவு

●

21-10-55 வெள்ளி மாலை 5-மணி

நாகர் கோயில் ஒழுகினசேரி அசோகா தியேட்டரில்

அறிஞர் அண்ணா அவர்கள்

சிறப்புச்சொற்பொழிவாற்றுவார்

●

அதுசமயம் மாநில மாநாட்டுக்கு நிதி அளிக்கப்படும்

நன்கொடையாளர்—ரூ 1. அணா 8

நா ம. தி. மு. க. நாகர்கோயில்

உங்கள் குடும்பத்துடன் கண்டு களிக்க மீண்டும் மூன்றாவது முறையாக இந்த இணையற்ற நாடகம் நடைபெறுகிறது

நாஞ்சில் கி. மனோகரன் தலைமையில்

மாஸ்டர். ஆர். கோவிந்தன் குழுவினரின்

என் தங்கை

(வில்லன் டி. எஸ். நடராசன் தீட்டிய நாடகம்)

●

15—10—55 சனி இரவு 9-30 மணிக்கு

கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலுள்ள

சவுந்தர்ய மகாலில் நடைபெறும்.

கட்டணம் : ரூ. 3, 2, 1. அணா 8.

உரிமையாளர்: D. சுப்ரமணி, N. திருநாவுக்கரசு, K. மோகன்.

சென்னை 43-வது வட்ட தி. மு. க.

பொதுக்கூட்டம்

●

23—10—55 மாலை 6 மணிக்கு

மீர்சாகிப் பேட்டையில்

நடைபெறும்

○

தலைவர்

தோழர் கே. கோவிந்தசாமி

(சென்னை மாவட்ட தி. மு. கழக முன்னாள் செயலாளர்)

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத்

வி. முனுசாமி

(நகரசபை உறுப்பினர்)

எமது இணையற்ற இரண்டாவது வாரம்.

நகரெங்கும் இதுவே முக்கிய பேச்சு.

வேலூர் முள்ளிப்பாளையம் தியேட்டரில் 14-10-55 வெள்ளி முதல் தினசரி

இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் நாடக மன்றத்தார் நடிக்கும்

மணிமகுடம்

கலைஞர் மு. கருணாநிதியின் புத்தம் புதிய கருத்தோவியம்

குறிப்பு :—ஏராளமான பொருட் செலவில் தயாரித்த கண்களைக் கவரும் சீன்கள், டெக்னிக் கலர் காட்சிகள் ஆகியவைகளுடன் இந்நாடகம் தினசரி நடைபெற்று வருகிறது. பிரதி திங்கட்கிழமைகளில் மட்டும் விடுமுறை.

கட்டணம்:— 2—8—0, 1—8—0, 0—12—0, 0—6—0, தாய்மார்களுக்குத் தரை 0—4—0.

செய்திகள்

பம்பாய்

அந்தேரி

தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 30—9—55 மாலை 6-மணிக்கு கோல்டுங்கரி பணிமனையில் தோழர் என். ரத்தினமுத்து தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம் செயலாளர் தோழர் எல். எம். பாண்டியன் அவர்கள் கூட்டத்தை துவக்கி வைத்து கடந்த கால அறிக்கையையும், சென்னையிலிருந்து வந்த கடிதங்களையும் வாசித்தார். தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் இரா. தஞ்சைத்துரை பொருளாளர் பொறுப்பிலிருந்து விலகுவதை ஏற்றுக் கொள்ளப்பட்டு புதிய பொருளாளராக தோழர் வி. சுப்பையா ஒருமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டார். பின்னர் பொதுக்குழு உறுப்பினராக தோழர் எஸ். முத்து தேர்ந்தெடுக்கப்பட்டார். 'நம்நாடு' தினத்தாளை கழக சார்பில் வரவழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கோரேகான்

2—10—55 அன்று மாலை 5-30 மணிக்கு கோரேகான் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் தியாகராசன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் த. மு. பொற்கோ, அண்ணாமலை, செல்லையா, இரா. சண்முகராசன், இரா. இளந்திரை, இரா. தஞ்சைத்துரை மற்றும் பல கிளைக் கழகத் தோழர்கள் நாட்டுப் பற்றை பற்றியும் அதில் நாம் செய்ய வேண்டிய தொண்டைப் பற்றியும் விளக்கினர், பின்னர் தோழர் பொற்கோ கழகக் கொள்கைகளைப் பற்றியும், வெளிநாட்டில் வாழும் திராவிடர் நிலைமையைப் பற்றியும், சொற்பொழிவாற்றினர்.

அமைப்புக் கூட்டத்தில் நிர்வாகிகளாக கீழ்க்கண்டோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

செயலாளர் தோழர் ஏ வி. இராமன், துணைச் செயலாளர் தோழர் கிருஷ்ணன் பொருளாளர் தோழர் இரா. இளந்திரன்.

கொலாபா கிளை

திராவிட நாடு பிரிவினை நாள் கூட்டம் கொலாபா தி. மு கழக சார்பில் 22—9—55 வியாழன் இரவு 10 மணியளவில் கூப்ரேஜ திடலில் நடைபெற்றது, அதுசமயம் தோழர்கள் கடலூர் எஸ். மோகன், அருணாசலம் இயக்கப் பாடல் பாடினர், பின் துணைச்செயலாளர் க. சு. செகநாதன் முன்மொழிய ஞா. ச. மதுரகேந்திரம் வழிமொழிய தலைவர் எ. பி. இ. ஆறுமுகம் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது. தலைவர் முன்னுரையில், கடந்த ஆறுண்டு காலமாக தி மு. கழகம் செய்துள்ள பணிகளை தெளிவாக மக்களுக்கு எடுத்துக் கூறினர். பின் தோழர். கே.கே. இராமநாதன் பேசும்போது "திராவிட இயக்கம் நாட்டிலே ஏற்பட்டது முதலாக பலத்த எதிர்ப்பிலே வளர்ந்தது. எதிர்ப்பு ஏற்பட ஏற்பட வளர்ச்சியுறும் தன்மை அதிகமாகி வளர்ந்து வந்துள்ள இயக்கம் தி.மு.க. தான்." என்ருர். பின் தோழர்கள் எஸ். தங்கையா, மா. அண்ணாமலை, ஏ. எஸ். அன்பரசு, இரா. மா. சண்முகராசன், சு. தங்கவேலன், த. மு. பொற்கோ ஆகியோர் பேசினர். பொற்கோ நீண்டதோர் சொற்பொழிவாற்றினர். இறுதியாக குளிர் பான விருந்துடன் இனிது கூட்டம் முடிவுற்றது. விருந்து செலவில் பாதி பணம் தோழர் கே. கே. இராமநாதனுடைய அன்பளிப்பாகும்.

கோவாப் போராட்டத்தில் உயிர் நீத்தவர்கட்கு வீர வணக்கம் தெரிவித்தும் போராட்டத்திற்கு ஆதரவு தந்தும், நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆமதாபாத்

2—10—55-ல் மாலை 4-30 மணிக்கு ஆட்டாவாவாசால் ப. பாண்டியன் இல்லத்தில் தி. மு. கழக செயற்குழு ப. பாண்டியன் தலைமையில் கூடியது.

அதுசமயம் சமர்ல்பூர் வட்டக்கிளை கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது.

மணிநகர் வட்டக் கிளையின் சார்பாக வெளியிட யிருக்கும் (வளரும் வடக்கு தேயும் தெற்கு) எனும் புத்தகத்தை ஆதரிப்பதுடன் அதனை விற்பனைசெய்ய பூரண ஒத்துழைப்பு அளித்தல்.

25—9—55-ல் நடந்த திராவிட நாட்டுப் பிரிவினை வார பொதுக் கூட்டமும் அதையொட்டி மாநில மாநாட்டு நிதி யளிப்பு விழாவும் முத்தமிழ் நாடக மன்றத்தாரால் நடத்தப்பட்ட யார் குற்றவாளி என்ற ஓரங்க நாடகமும், ஆகிய எல்லாவற்றையும் ஒருங்கே சிறப்புற நடத்தித் தந்த ஆ. நகர தி. மு. க. பொதுச்செயலாளர் ஆர். டி. சலம் அவர்களையும் முத்தமிழ் நாடக மன்றத்தாரையும் இச்செயற் குழு பாராட்டுகின்றது.

கோவா போராட்டத்தில் உயிர்நீத்த தோழர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவதுடன், கோவா சர்க்காரின் அடக்கு முறையை கண்டிக்கிறது.

அடுத்து நடக்க விருக்கும் ஐந்தாண்டு நிறைவு விழாவில், தென்னாட்டின் தி. மு க. தலைவர்களில் ஒரிருவரை வரவழைத்து சிறப்பான முறையில் மேற்படி ஆண்டு விழாவை நடத்தித் தர ஆ. ந. தி. மு. க. பொதுச் செயலாளரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

இலங்கை

இராமநாதபுரம் மாவட்டம் செல்வரசன் கோட்டை தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் மாதப் பொதுக்கூட்டம் கடந்த 3—10—55ல் கொள்ளுப்பட்டி காலி வீதி, 510/4 இலக்க இல்லத்தில் பெரியார் எஸ். எம். துரைச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றன. தலைவர் முன்னுரைக்குப்பின் செயலாளர்—பொருளாளர் ஆகியவர்களால் கடந்த கூட்ட நிகழ்ச்சி வரவு—செலவு கணக்கு, கோலாலம்பூர் பெ. காளையப்பு இந்திய பொது சேவைக் கமிஷனர் உயர். திரு. ஜே சிவசண்முகம் பிள்ளை ஆகியவர்கள் அனுப்பிய. கடிதங்கள்—நகல் குறிப்புகள் சமர்ப்பிக்க ஒப்புக் கொள்ளப்பட்டது.

விவாத அரங்கில் தலைவர் அ. ச. வேல் ம. சி. அழகையா, சி. விஸ்வநாதன்—மு. லெட்சுமணன், தூ. ப. ராக்கன், க. சிவானந்தம், வ. வே. பழனி நாதன், இரா. ச. பொன்னம்பலம் மற்றும் பலரும் பங்கு பெற்று சிறப்பித்தார்கள்.

ஓரமங்கலம்

தி. மு க. கிளையின் சார்பில் திராவிடப் பிரிவினை நாள் கொண்டாட்டம் 1-10-55 சனிக்கிழமை மாலை 3மணிக்கு தி. மு. க. தலைமை கொடி மரத்தில் கொடி யேற்றி பின் ஊர்வலமாக கிளம்பி தி. மு. க. உறுப்பினர்கள் இல்லம்தோறும் கழகக் கொடியை கழக செயலாளர் ஏற்றுவித்தார். கொடி ஏற்றுவிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தின்பண்டங்கள் வழங்கப் பட்டது.

சௌந்திரபாண்டியனுர் பகுத்தறிவு மன்றம்

3—10—55 மாலை 7மணிக்கு தோழர் எம். மாரியப்பா தலைமையில் மன்ற உறுப்பினர்கள் கூட்டமும் பாண்டியனுர் பிறந்த நாள் விழாவும் அன்பகத்தில் கொண்டாடப்பட்டது. அதுபோது தோழர்கள் டி. வி. துரை, எம். பன்னீரையா ஆகியோர் பாண்டியனுரின் சேவை குறித்து சொற்பொழிவு நிகழ்த்தினர். தலைவர் முடிவுரைக்குப் பின் துணைச்செயலாளர் பி. சாமிநாதன் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

தமிழ்ப் புலவர் திரு வை. பொன்னம்பலனுர்

அவர்களுக்கு பொன்னுடை போத்தும் சிறப்பு விழா.

குழுவினரின் வேண்டுகோள்.

அன்புடையீர் !

தமிழ்ப் புலவர் திரு வை. பொன்னம்பலனுர் அவர்களது தனித்தமிழ் பற்றையும் மொழி, நாடு, இனம் ஆகியவற்றிற்கு தமது ஆர்வத்தை மாணவர்களிடத்தில் மிகவும் சிறப்பான முறையில் பரப்பி வருவதைக்கண்டும் சேலம் தமிழ்ப் பேரவை புலவர் அவர்கட்கு பொன்னுடை போத்தி சிறப்பு செய்து முடிந்தவிற்கு பணமுடிப்பும் கொடுக்க முன் வந்திருக்கிறது. இவ்விழா நவம்பர் இறுதிக்குள் நடத்திவிட முடிவு செய்யப்பட்டுள்ளது ஆதலின் திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவரும் தங்களால் இயன்ற அளவு நன்கொடை அனுப்பி உதவி செய்யும்படி வேண்டி கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

பணம் அனுப்பும் முகவரி :—

செ. கா. பழனிச்சாமி. தலைவர்
தமிழ்ப் பேரவை 218, நரசிங்கபுரத்
தெரு, குகை. சேலம்

அன்புள்ள,
இரா. சகநாதன்
விழாக் குழு செயலாளர்.

புலவர் அவர்களைப் பற்றி சில குறிப்புகள்

வேலூர் ஹிந்துப் பள்ளியில் சுமார் 10 ஆண்டுகள் தமிழ் ஆசிரியராக பணியாற்றும்பொழுது ஹிந்து என்பதை எடுத்துவிட்டு கந்தசாமிக் (கண்டர்) பள்ளிக்கூடம் என்று பெயர் வைக்க மிகவும் பாடுபட்டவர். தனித் தமிழ்ப் பற்ருல் இவரை நாஸ்திகர் என்று சொல்லி 3 மாத சம்பளத்தை முன் கூட்டியே கொடுத்து விலக்கி விட்டார்கள்.

பிறகு பெரியார் அவர்களது உதவியால் சேலத்தில் நகராண்மை உயர் நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணியாற்றினர். தமிழ் வகுப்பில் தமிழிலும், ஆங்கில வகுப்பில் ஆங்கிலத்தில் பேசும்படியும் சொல்லிவிட்டு, தமிழ விடைத்தாளில் முகவரி தமிழில்தான் எழுத வேண்டும் என்றும், ஆங்கில விடைத்தாளில் தமிழ் முகவரி எழுதினுல் ஆங்கில ஆசிரியர் எண் போடுவாரா! என்று சொல்வது வழக்கம்.

தமிழ் விடைத்தாளில் மீறி ஆங்கில முகவரி எழுதினவர்களுக்கு எண்கள் போடாமல் தமிழ் விடைத்தாளில் ஆங்கிலம் எழுதியதால் 10 எண்கள் குறைத்திருக்கிறேன் என்று எழுதி விடுவார். இதனுல் பள்ளிக்கூடமே எதிர்த்தது. அஞ்சவில்லை. பிறகு மாணவர்கள் உணர்ந்தார்கள். 6-ம் படிவ பொறுக்குத் தேர்வில் புரட்சி கவிஞர் பாரதிதாசன் கவிதையான "ஓ என் சகோதரரே ஒன்றுக்கும் அஞ்சாதீர்" என்றதை பூராவும் எழுதி அதற்கு விளககம் கேட்டு இருந்தார், தேர்வு முடிந்ததும் பிராமண சேவா சங்கத்தார் அரசாங்கத்திடம் முறையிட்டனர். விசாரித்த பிறகு குற்றம் இல்லை என்று சொல்லி விட்டு. இந்த மாதிரி பாட்டுக்களை மாணவர்களிடத்தில் சொல்லித் தரக்கூடாது என்று மேற்படி பாட்டை தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி மாநிலத்தில் உள்ள எல்லா பள்ளிகளுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. புலவர் இதை எதிர்த்து, கவிஞர் பாட்டை அரசாங்கம் ஏற்று 6-ம படிவ பாட புததகத்தில் வந்து இருப்பதால் மற்ற பாட்டை ஏன் சொல்லித் தரக்கூடாது என்று அஞ்சாமல் கேட்டார்.

திருச்சி மாவட்டத்தில் ஓர் விழாவில் பேசும்பொழுது. திரு. ராஜா சிதம்பரம் புலவரை திருச்சி மாவட்டத்திற்கு அழைத்தார் அதன்படி முசிறி சென்ருர். அந்தப் பள்ளியில் நடக்கும் ஒழுங்கீனர்களைக் கண்டு மனம் வெதும்பி மாணவர்களுக்கு அறிவுரை கூறி காலை இறை வணக்கத்தில் கட்டுப் பாட்டை உண்டாக்கி இராமலிங்க சுவாமிகள் தாயுமான அடிகள் ஆகியோர் பாட்டை பாடி ஒழுக்கம் சொல்லிக் கொடுப்பார்; இதனுல் ஆரிய ஆசிரியர்கள் மனம் வெதும்பி, ஆரிய நாட்டின் ஆண்மையோடு இயற்றிய என்றதை பாடவும், அரசாங்கம் தடை செய்த வரியை பாடாதே என்று புலவர் தடுக்க பிறகு கூப்பிட்ட ராஜா சிதம்பரமே விலக்கி வைத்தார். சர்க்காரிடம் முறையிட நீதி கிடைத்து (ஒரு ஆண்டு கழித்து) இப்பொழுது செந்துறையில் தமிழ்ப்பணி ஆற்றி வருகிருர். அவருக்கும் இன்றும் தொல்லைகள் கொடுப்பதாக அறிகிறோம். இருந்தாலும் அஞ்சாமல் பணியாற்றும் அவருக்கு திராவிடர்கள் சிறப்பு செய்யாமல் இருக்கலாமா!

இரா. சகநாதன்

தாய்மார் கழகம்

8—10—55 பிற்பகல் 2-30 மணிக்கு சென்னை பெத்துநாயகன் பேட்டை எண் 15, முத்துகிருஷ்ணன் தெரு இல்லத்தில் திருக்குறள் வகுப்பு நடைபெற்றது.

பேராசிரியர் புலவர் மயிலைசிவமுத்து (தமிழாசிரியர் கழகத் தலைவர்) அவர்கள் 'வலியறிதல்' என்ற அதிகாரத்தை நடத்தினர்கள், தொடர்ந்து திருவல்லை பாலசுப்ரமண்யம் பி.ஏ, புலவர் அழகுவேலன், திருமதி சுந்தராம்பாள் ஆகியோர் பேசினர்.

வகுப்பு முடிந்தபின் திருமதி சாரதாம்பாள் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிய திருமதி பார்வதி அம்மையார் வழிமொழிந்தனர். தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

நாளது 25—10—55 செவ்வாய் ஆகிய கலைமகள் விழா நாளே டாக்டர் தருமாம்பாள் அம்மையார் பிறந்த நன்னாளாகும். இந்நாளைத் தாய்மார் கழகம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடத் தீர்மானித்திருக்கிறது. தமிழ் நாட்டில் ஆங்காங்கேயுள்ள தாய்மார் கழகங்களும் பிற கழகங்களும் இந்நாளைச் சிறப்பாகக் கொண்டாடுவதுடன் அம்மையாரை வாழ்த்திச் செய்தி அனுப்புமாறும் கேட்டுக் கொள்கிறது.

சென்னை 4-வது வட்டத் தி. மு. க.

5—10—55 மாலை 8 மணிக்கு 118 சோலையப்பன் தெரு கல்வாய் இல்லத்தில் செயலாளர் த. சேதுராசன் தலைமையில் நடைபெற்ற நிர்வாகக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

வரவு-செலவு கணக்கு அங்கீகரிக்கப் பட்டது.

சென்னை நகர சபைத் தேர்தலில் நகராண்மைக் கழக உறுப்பினர்களாக, பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 9வது வட்ட செயலாளர் தோழர் வி. முனுசாமி 29-வது வட்ட செயலாளர் அ. பொ. அரசு ஆகியோருக்கு இக்கமிட்டி தனது பாராட்டுதலையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது.

நிர்வாகக் குழு உறுப்பினர் கே. நடேசன் அவர்கள் விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தோழர்கள் ஜி. சின்னத்தம்பி சத்தியநாதன் ஆகிய இருவரையும் நிர்வாக குழு உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளுவதென முடிவு செய்கிறது.

பஞ்சாப் கட்டுரை

பிரியா விடை!

பொன்றும் நாள் மலர்ந்தது. கீழ்வானில் கடரவன் செஞ்சுடர் வீசி எழுந்தான். அதுவரை மலர்ந்து விளங்கிய எனது உள்ளம், கதிரவனைக் கண்ட அல்லி மலர் எனக் கூம்பிவிட்டது. முகத்தில் சோகஞ் சூழ்ந்தது.

வழக்கம் போல், காலைக் கடன் கழிக்க, ஹேத்ராம் என்னைக் கழனி வெளிப்பக்கம் அழைத்துச் சென்றார்.

முற்றித் தெரிய கோதுமை மணிக் கதிர்களின் நிறை தாளாது, வளைந்து தாழ்ந்த கோதுமைப் பயிர்களெல்லாம் எனக்கு வணக்கம் தெரிவிப்பதைப் போன்றதொரு காட்சி அளித்தது.

செழுமையுற்றக் கோதுமை விளை நிலங்களே! உங்களை மீண்டு எப்போது சந்திக்கப் போகிறேன்! உங்களைப் பிரியும் வேளை நெருங்கிக் கொண்டேயிருக்கிறது! சென்று வரட்டுமா?

நான் வருவேன்! போகேன்! ஆனால் நீ என்றும் அறைத்துக் கொண்டிருப்பாய்! எனதருமை மலவு ஆலையே! விடை பெற்றுக் கொள்ளட்டுமா!

கருப்பஞ் சாறைப் பிழிந்துத் தள்ளி மக்களுக்கு —மேலோர், கீழோர் என்ற பேதமின்றி எனைவோருக்கும் இன்சுவை யூட்டும் கரும்பாலையே! கருப்பஞ் சாற்றைப் பாகாக்கி வெல்லங் கூட்டக், கொப்பளிக்கும் பாகுக் கொட்டிலே! கண்ணுக் கெட்டியவரை விளைந்தோங்கி, எந்நாட்டுப் 'பட்டினத்தடிகளை' நினைவூட்டும் கரும்புச் சோலைகளே! உங்களை யெல்லாம் விட்டு எப்படிப் பிரிவேன்! வரட்டுமா? விடையளிப்பீர்களா?

எத்தடையும், எவர் தடையுமின்றி வரப்புகளில் சிதறிய கோதுமை மணிகளைக் கொத்தித் தின்றுடும் மயில் கூட்டங்களே! உங்கள் காட்சி எனக்குக் கண் கொள்ளாக் காட்சி! இயற்கை யோடியைந்த காட்சி! எங்கள் பக்கங்களில் இவ்வளவு இலகுவில் கிடைக்காத காட்சி! ஆ! இக்காட்சியினின்றும், இன்றே இன்னுங் கொஞ்ச நேரத்திலே பிரியத்தான் வேண்டுமா! எனதழகு மயில்களே! விடை யளியுங்கள்!

வளைந்து நெளிந்து ஓடுஞ் சிற்றாறே! இதுவே கடைசி வேளை, உந்தன் குளிர் நீரைத் தீண்டுவது! நீ எனது கண்களில் உறைவிடம் பெற்று விட்டாய்! குனிந்து உன்னைப் பார்க்கிறேன்! என் முகம் எனக்கு நன்கு தெரிகிறது! ஆ! எனது முக நிழல் கலைந்து விட்டதே! இனம் இனத்தைச் சாரும்! எனது கண்ணீரை உனது குளிர் நீர் அணைத்துக் கொள்கிறதே! நீயுந்தான் நிமிர்ந்து என் முகத்தைப் பாரேன்! உன் முகம் தெரிகிறதா!—"அதோ கண்ணீர்"—அதை இழுக்கும் சக்தியை நீ பெற்றிருக்கிறாய் ஆனால் உந்தன் நீரை இழுக்குஞ் சக்தி எந்தன் கண்ணீர் பெறவில்லை! வலிமை யுடைத்து நீயே! வணக்கம் சொல்கிறேன்! விடையளித்து அனுப்புவாயாக.

உரை கிணறுகளே! நெடு ஆழத்துள் உறையும் நீர் நிலைகளே! பாரசீகச் சக்கரக் கவலை—ஏற்றங்களே! உங்களை எல்லாம் மீண்டும் காண்பது எப்போது! பிரிந்து போகிறேன்! என்னை மறவாதேயுங்கள்!

இங்கே நின்று கண்டால் கண்களுக்குப் புலப்படும் கிர்க்கி பாஸீக் கிராமமே, நாவல் பாஸிப்புரமே, பாஜவாடா நகரமே, ஹோஷியார்பூர் நகரமே, தர்ம சாலா பனிமலையே. உங்கள் எல்லோருக்கும் எனது வணக்கம்! செல்கிறேன்! மீண்டும் எப்போது சந்திப்பேனோ!

எழில் மிகு புராணி பாஸீயே உன்னை விட்டு எப்படிப் பிரிவேன்!......

......என்ன! திருவேடம்! ஏன் இப்படி? எதற்கு கண்களில் நீர் தேக்கி வடிக்கிறீர்!—என்று ஹேத்ராம் கேட்டதுதான் தாமதம்!—உண்மை கூறுகிறேன் தேம்பித் தேம்பி அழுதே விட்டேன்!

எனது இன்றைய இந்த வாழ்நாள் வரை கடுகளவேனுஞ் சகித்துக் கொள்ள முடியாத ஒரு நிகழ்ச்சி—பிரிவுதான்! ஹேத்ராம் ஜீ! இத்தகு பிரிவு நிகழ்ச்சிகள் தாளாது எப்படி வளர்ந்தேன் என்பதைக் கேளுங்கள். பள்ளிப் பருவத்தில் ஒரு பேரிடி! என்னிடம் மிக்க நேசமும் பாசமும் காட்டிய தங்கை பிரிந்து மறைந்தாள்! பல நாட்கள் வாடினேன்! வதைந்தேன்! நாகப் பட்டினத்தில் ஒரு ஐந்தாண்டு வாழ்க்கை வாழ வேண்டி வந்தது. அப்போது கலியாணமாகாதவன். திருமணத் தொந்தரவு கொடுக்க எனது அன்னை நாகை வந்து விட்டார். உடன் இரண்டாந் தங்கை, தாய் மாமன் வந்தார்கள். திருமணப் பேச்சு முறிந்து விட்டது! வந்தவர்கள் ஊர் திரும்பினார்கள், ரயிலடியில் அவர்கள் ஏறிய வண்டி நகர்ந்து விட்டது—நான் அழுதுக் கொண்டே நிற்கிறேன்!—பிறகு நண்பர்களைப் பார்த்து நிலை மாறினேன். அடுத்து திருமணம்! பெரியார் பணி, என். வி. என். மற்று அநேக கூட்டுத் தோழர்கள் வந்தார்கள். அன்று மாலையே அனைவரும் பிரிந்தார்கள். எனது உள்ளம் "சுடுகாடாய்" விட்டது! ஏங்கினேன்! பிறகு இரண்டாந் தங்கை!— அண்ணன் பாயில்தான் படுப்பேன், அண்ணஞ் சாப்பாட்டுத் தட்டில்தான் சாப்பிடுவேன் என்ற பாசப் பழக்கமுள்ளவள்! வெஞ்சுரத்தால் உயிர் நீத்தாள்! பிரிவு தாளாது தடித்தேன்! அவைகளெல்லாங்கூட ஏனோ எனக்கு இங்கே உங்களைப் பிரியும்போது நினைவிற்கு வந்து பாடாய் படுத்துகின்றன!—என்று எனது நிலையை ஹேத்ராமுக்கு விளக்கினேன்!

'திருவேடம்'

பாவம்! அவரையுங் கண்கலங்க வைத்துவிட்டேன்! நல் உள்ளம்! இளகிய உள்ளம்! ஹேத்ராம் உள்ளம்!

அதற்கப்புறம் பேச்சுயில்லை. வீடு நோக்கி நடந்தோம். நான் ஏதாவது கேட்டால் சுருக்கமுடன் குழைவான பதில் கூறிவிட்டு ஒரு குளிர்ந்த கனிவுப் பார்வையை மட்டும் என்மீது வீசுவார்!—ஹேத்ராம்.

திடுமென பேய்க் காற்று வீசிற்று! குளிர் காற்று! விரைந்து நடந்தோம். வீடடைந்தோம்! அடைமழை கொட்டு கொட்டென்று கொட்டித் தீர்த்தது! சற்று நேரத்திற்கெல்லாம் வெயில் காய்ந்தது. அதற்குள் வெந்நீரில் குளித்துவிட்டு, மாற்றுடை பூண்டு, காலை உணவு உண்டு, சந்த்ராம் இல்லம் ஏகினோம். உடன் ஹேத்ராம் மனைவி, அவரது மக்கள் சரளா, குஷ்மா, வினயக குமார், எல்லாம் வந்தார்கள்.

திருவேடம்! திருவேடம்! வாருங்கள், வாருங்கள். நேற்றெல்லாம் எனக்குத் தூக்கமே இல்லை! ...Therefore you are going to leavc us all shortly!—சற்று நேரத்தில் எங்களை யெல்லாம் விட்டுப் பிரியப் போகிறாய்!—என்று சொன்னார் சந்த்ராம்!

Yes Ji!—ஆமாம் அய்யா! என்று பதில் கூறிக் கொண்டே பெட்டியையும், தோல் பையையும், படுக்கையையும் சரிக்கட்டினேன்!

ஏன்! திருவேடம்! இன்னும் மூன்று நாட்கள் இருந்து விட்டுப் போகலாமே! வருகிற ஞாயிற்றுக் கிழமை சாது ஆசிரமத்தில் ஒரு விழாக் கூட்டம் இருக்கிறது. அதைக் கண்டு போகலாமே!—என்று கேட்டார் சந்த்ராம்!

இல்லை! இல்லை! இன்று வெள்ளிக்கிழமை! இன்று புறப்பட்டால்தான் நான் குறித்த நாளில் எனது பிரயாணத்திட்டப்படி சென்னை சேரமுடியும். மன்னிக்க வேண்டும் சந்த்ராம் ஜீ நான் இன்றே கிளம்ப வேண்டும்! அதுவுமன்றி எங்கள் தமிழில் ஒரு பழமொழி யுண்டு: "விருந்தும் மருந்தும் இரண்டு நாளைக்குத்தான்" என்று. ஆக அப்பழமொழியின்படிப் பார்த்தாலும் நான் இரண்டு நாட்களுக்குமேலேயே இருந்து விட்டேன். புறப்பட வேண்டியதுதான்—என்று கூறினேன்.

பிள்ளையின் அருமை தாயிற்குத் தானே தெரியும்!...ஆமாம்!...பகல் உணவு எங்கே சாப்பிடுவாய்? இந்தா இந்தக் கட்டுச்சோறு மூட்டையை வைத்துக் கொள்!—என்று அருமைப் பாட்டி சுந்தர் பாய் கொடுத்தார். மகிழ்ச்சி பொங்க வாங்கி வைத்து நன்றியுரை மனங்கொள்ளப் பகன்றேன்!

சரி! மணி ஆய்விட்டதே! இப்போது புறப்பட்டால்தான் ஹோஷியார்பூரில் இரண்டு மணிக்குப் புறப்படும் இரயிலைப் பிடிக்கலாம்! என்றார் ஹேத்ராம்.

சந்த்ராம் ஜீ! இந்தக் 'காரவான்' இதழைத் தாங்களே வைத்துக் கொள்ளுங்கள். அதில் நான் தங்களுக்குப் படித்துக் காட்டிய 'பெரியார்—அண்ணா' கட்டுரை, கே. ஜே. ஜாக்கப் என்பாரால் எழுதியது இருக்கிறது—என்று கூறி அதை அவரிடங் கொடுத்தேன்,

சரளா! இந்தா! இந்த எழிற் புத்தகத்தை நீ வைத்துக் கொள்! அது முழுமையும் பம்பாய் மாகாணத்தைப் பற்றியதே! அதை நான் கடந்த மாத இறுதியில், பம்பாயைச் சுற்றிப் பார்க்கச் சென்றிருந்தபோது வாங்கினேன். அதை முழுதும் நான் படித்து விட்டேன். அது எனது பஞ்சாப் வருகையின் நினைவாக உன்னிட மிருக்கட்டும்—என்று கூறி அதைச் சரளாவிடங் கொடுத்தேன்.

சந்த்ராம் ஜீ! இந்த இரண்டு கடிதங்களை உங்களைக் கண்டதும் கொடுத்திருக்கவேண்டும்! மறந்து போனேன்! தவறி விட்டேன். இவை இரண்டும் தோழர் எஸ். இராமனுதன் அவர்களும், சென்னை பல்கலைக் கழக ஹிந்தி பேராசிரியருங் கொடுத்தவை. (என்னை அவர்களிருவரும் சந்த்ராமிற்கு அறிமுகப் படுத்தி யிருந்தார்கள். ஆனால் நான் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே கடிதக் கற்றைகளின் மூலம் நன்கு அறிமுகமாகிவிட்டேன் என்ற 'இறுமாப்பாலோ' என்னவோ, அக்கடிதங்களை சந்த்ராமிடம் வேளையில் கொடுக்க மறந்து போனேன்.)—என்று கூறி சந்த்ராமிடங் கொடுத்தேன்.

தோழர் இராமனுதன் அவர்களது அறிமுகக் கடிதம் கீழ்க்கண்டவாறு :

4th February 1954

Dear Shri· Sant Ram,

I am giving this letter to Mr. T...who is travelling to meet you and spend some time in your company He is an earnest young man who has published an account of your life in the Tamil language, I wish I could travel with him and have the pleasure of meeting you in person. but unfortunately I have not the health to undertake such a long journey I hope you are getting the 'INDIAN RATIONALIST' regularly· It would be a privilege to publish your articles in our journal At any rate it would be a pleasure to receive your criticism of each issue and your guidance in the conduct of the journal· I trust this will find you in good health,

With Sincerest good wishes,

Yours sincerely, S, Ramanathan

ஹிந்திப் பேராசிரியரது கடிதம் இந்தியிலேயே எழுதப்பட்டிருந்தது. எனக்கும் இந்தி தெரியாது—'திராவிடனு'லும் இந்தி அச்சு கோர்க்க முடியாது, எனவே அக்கடிதம் எப்படி எழுதப்பட்டது என்பது தெரிவதற்கில்லை. ஆனால் அதில் ஒரோ ஆங்கில வாக்கியமிருந்தது அது இது : They also serve who stand and wait—'காத்து நிற்போர் கூட உழைக்கிறார்கள்'—ஆங்கிலக் கவி மில்டன் வாக்காம் அது!

விடை பெற்றுக் கொள்ளும் படலம் ஆரம்பமாகியது.

ஐயா ஹேத்ராம் ஜீ! தாங்கள் எனக்கு நிழலென நின்று பேருதவி (பணியே) புரிந்தீர்கள். அதற்கு ஈராடான எக்கைம்மாறும் செய்ய வல்லவன் அல்லேன்! தங்களன்பு என்றும் என்பால் நிலைத்திருப்பதாகுக! இந்தாருங்கள் எனது நினைவு ஏடு. இதில் எனக்குக் கூற வேண்டியதைக் கூறிக் கையெழுத்திட்டுக் கொடுங்கள்.

With best wishes for your happy life and your mission for uplift of so called depressed castes in Bharat,

...Het Ram, Purani Basi 19—2—54

அம்மா ஹேத்ராம்ஜீ! தாங்கள் எனக்குத் தாயெனச் சீராட்டிப் பாராட்டி உண்டி வகைகள் படைத்திட்டீர்! உப்பிட்ட வரை உள்ளளவும் நினைந்து நிற்பேன் என உறுதி கூறுகிறேன்! தங்கள் இல்லத்திற்கு எனது வரவை நல்ல வரவு என்று எடுத்துக்காட்டிய தாய் எருமைக்கும் நேற்று அது பெற்றெடுத்த இளங் கன்றுக்கும் எனது மகிழ்ச்சியை தெரிவிப்பதோடு எனது நன்றி கலந்த பிரிவினை வணக்கத்தையும் சொல்லி விடுங்கள்! தங்க

உருவகச் சித்திரம்—

பேசும் வாழை

வளம் நிறை வயலிலே வாழைக் கன்றொன்று வளரக் கண்டேன். திங்கள் சில அழிந்த பின் பருத்து வளர்ந்த பருவத்துப் பெண்ணின் தளிர் மேனி போன்று வாழையைக் கண்டேன். புற்றுப் பாம்பெனச் சீறிப் பொன்னிறக் குருத்தொன்று உச்சியில் தலை நீட்ட, கார்முகில் கண்டு களித்து நடனமாடும் கலாப மயில் விரித்த தோகைபோன்று, படர்ந்த பச்சை இலைகளை மென்காற்று தாலாட்ட, கோபுரக் கலசம்போல் குங்கும நிறத்தில் பூவொன்று பூமிக்கு வணங்கும் அழகு காட்ட, அந்த எழிற்காட்சி கண்டோர் உள்ளத்திற்கு வகையூட்ட, சில பல நாட்கள் ஓடி உருண்டு மறைந்தன, தனித்திட்ட வேளையில் ஒரு நாள்! இனித்திட்ட அக்காட்சி திரைப்படம் போல கண்ட என் உள்ளம்; துடித்தது. மீண்டும் காணச் சென்றேன்.

கொழுத்த பழக்குலையொன்றைத் தாங்கிய வண்ணம் பெருமிதத்தோடு நின்ற வாழையடியில் கோழியைச் சுற்றி குஞ்சுகள் போல பிஞ்சுக் கன்றுகள் வளர்ந்து நின்றன. வாழைக்குரிமையாளன் வந்தான் அங்கு; ஆங்கோ! கொடுவாள் கொண்டு பலியிடும் ஆட்டின் தலையினைக் கொய்வதுபோல செழித்த பழக்குலைத் தண்டை அறுக்கக் கண்டேன் கருக்கரிவாளால், அரிவாளின் அடுத்த முத்தம் அடிமரந்தனில்; சலசலவென எழுந்தது சத்தம், சாய்ந்தது வாழை.

ஓடி வந்தான் ஒருவன். எங்கோ விழாவாம்; பந்தலில் கட்டி அழகினைக் கூட்டி பொலிவினைக் காட்ட, பேரம் பேசிப் பணத்தைக் கொடுத்தான். அள்ளி அணைத்தான்; துள்ளி நடந்தான். கண்மணிகளே. வாழையடி வாழையென வாழ்க நீவிர் என்று உவமை கூறி வாழ்த்து மொழியும் வையத்து மாந்தருக்காக வாழுங்கள் எனக்கூறிப் பிஞ்சுக் கன்றுகளை விட்டுப் பிரிந்தது. மகவைப் பறிகொடுத்த மாதாவைப் போல மல்கிய கண்ணீர் மண்மீது கொட்டப் பதைத்து நின்றேன். அப்பாவியே! என்றொரு குரல் கேட்டேன். பிஞ்சுக் கன்றுகள்தான் பேசின.

ஏனப்பா கண்ணீர்த் துளிகளைச் சிந்துகிறாய்! பிறந்தாள் என் அன்னை—பிரிந்தாள் இன்று. அவளின் கடமையைப் பூர்த்தி செய்தாள் என்று நாங்கள் மகிழ்கிறோம். எங்கள் அன்னையின் புகழ் மங்காமல் எங்கள் இன மாண்பு துலங்க நாங்கள் வாழ்வோம். நன்றி மறவோம், வளர்த்தவருக்கு அன்புக் காணிக்கையாக பழக்குலை ஒன்றை தந்து தான் மாள்வோம், ஆனால் நீ! உன் இன மாண்பு மங்காத மணமோடு என்றும் வாழ என்ன செய்தாய்! சோற்றுப் பிண்டங்கள் என வருங்காலம் உன்னை திட்டத்தான் வேண்டுமா? சோர்வு கொள்ளாதே! உன் சோர்ந்த உள்ளத்திற்கு உன் முன்னோரின் தித்திக்கும் வீர வரலாறு மருந்தாகி உன்னைப் புது மனிதனாக்கும் கேள்!

உன் தந்தையரும் தந்தையருக்கு தந்தையரும் பகுத்தறிவுடனும் பரந்த ஆற்றலுடனும் வாழ்ந்த திராவிடன், அவர் தனி அரசோச்சிய பூமி வற்றாத செழுமையோடும் வளமான மொழியோடும் பிறந்த திராவிட நாடு. மக்கள் மாண்பு மலரும் மன்றம் கண்டவர்கள். கன்னித் தமிழ் தழைக்க கலைமன்றம் நிறுமித்தவர்கள். இகழ்ந்துரை கேட்டால் இடியென முழங்கிடும் தன்மானமுள்ளவர்கள். கனகன் விசயன் என்போர் கற்கண்டுத் தமிழைப் பழித்தான் என்ற சேதி செவியில் புகுந்து கடுஞ்சினமாகி கண்கள் தீச்சுடராகி கரத்தில் போர்வாள் ஏந்தி படைகூடும் பாசறையில் முரசொலித்து பொன்னிக்கரை வீரர்களுடன் அணி வகுத்து கங்கைக் கரையில் களம் கண்டு கசடர் தம் கழுத்தொடிய சுமத்திய கல்லால் கண்ணகி சிலைசமைத்த வீரமிகு வேந்தன் சேரன் செங்குட்டுவன் வழி வந்த உன் இனம். நானும் நீயும் அழிந்தாலும் காலம் நம்மை அழித்தாலும் ஞாலம் உள்ளவரையும் வாழும் சீலமுள்ள வரலாற்றிலே பெருமையானதொரு இடம் பெற்றுவிட்ட உன் இனம், பாடுபட்டுத் தேடிப் புகழைக் குவித்து வைத்ததை மறந்து கேடுகெட்ட கூட்டமாய் வாழுகின்றார். கற்றிருக்கும் அறிஞர் சிலரும் பெற்றிருக்கும் உள்ளம் தன்னலச் சுரங்கம். "மன நலம் மன்னுயிர்க் காக்கம்—இன நலம் எல்லாப் புகழும் தரும்" என்ற வள்ளுவர் தம் சொல்லினை மறந்தார்.

உன் நாடு சிங்காரப் பூங்காடு! வறண்ட காடாக்கும் மாபாதகராம் மாற்றாரைச் சாடும் மறுமலர்ச்சித் தூயவரைக் காட்டிக் கொடுக்கும் துரோகத் தனத்தின் தூதுவராய் வாழுகின்றார். அய்யகோ! வெட்கம் வெட்கம் என உலகம் எள்ளி நகைக்க உரிமை இழந்தீர்கள், மாண்பை அழித்தீர்கள். தமிழன்னையை தலை தாழ்த்தி விட்டீர்கள். தன்மானம் கிடையாதா! இன எழுச்சி பிறக்கவில்லையா! என்று வீசிய சொற்கள் வேதனைக் கணைகளாய் மாறி நெஞ்சைத் துளைத்துத் துடித்துத் துவண்டேன்.

செழித்த பழக்குலையொன்று வழங்கி மனதாரத் தன் வாழ்வை இழக்கும் எங்கள் குலத்தைப் போல உயிரைத் தந்தேனும் தமிழர் உரிமையை செழிக்கச் செய்வேன், என்று உறுதி கொள்வாய் என்றது அந்தப் பேசும் வாழை!

வாழை இனத்தின் உயர் தியாகத்தை அறிந்தேன். கோழைத்தனத்தின் எதிரியாய் மாறி வீரனாய் நடந்தேன்!

கீழவைப்பாறு, மாறன்

ளிடம் விடைபெற்றுக் கொள்கிறேன்! வணக்கம்! நன்றி! வரட்டுமா?

ஹேத்ராமின் செல்வ மணிகளே! விடைபெற்றுக் கொள்ளட்டுமா!

தேவ்ராஜ! அருண்குமார்! நீங்கள்தான் புரானி பாஸியை நன்கு சுற்றிக் காண்பித்தீர்கள்! உங்கள் தோழமையை என்றும் மறவேன்! சென்று வரட்டுமா!

சுந்தர் பாய் பாட்டி! தென்னாட்டுத் திலகமே! திராவிட நாட்டுத் தாயே! இப்படி வாருங்கள்! சந்த்ராம் அய்யாவோடு இணைந்து நில்லுங்கள்!... அய்யா சந்த் ராம்ஜீ! அம்மா சுந்தர் பாய் தேவியே! நீங்கள் இருவரும் எனது சொந்த பெற்றோரையுந் தோற்கடிக்கும் வகையிலே நேசித்தீர்கள் அம்மா!... "தாத்ஜீ! தாத்ஜீ!!"—என்று பால் குவளை ஏந்தி எனக்குக் கடந்த இரண்டு நாளும் பாலூட்டினீர்கள்! உண்டியமுது ஊட்டினீர்கள். என்ன அன்பு! என்ன அன்பு!!......அய்யவே! தாங்கள் இன்முகத்தோடு கனிவு நெகிழக் கலந்து பேசி, தோளோடு தோள் இணைந்து. வயது ஏற்றத் தாழ்வு,—கல்வி, அனுபவ ஏற்றத் தாழ்வு எதையும் பொருட்படுத்தாது உண்மையில் என்னை அணைத்தெடுத்து ஆதரித்தீர்! அக மகிழப் போற்றினீர்! உயர்தர அதிகாரிகளாம், கல்விமான்களாம், பிகாரிலால், தக்கர்தாஸ், சாது விஸ்வபந்து, போன்றோர்களிடமும் என்மீது பாசமும், பரிவும், நன் மதிப்பும் கொள்ளச் செய்தீர்கள்! உங்கள் குடும்பத் தலைவர்கள், ஏன்! உங்கள் ஊர் மக்கள் அனைவருமே என்னிடம் பய பக்தி மரியாதை, அன்பு கொள்ளும்படி செய்து வைத்தீர்! என்னே பேரன்பு! என்னே பேரன்பு! எளியோனிடம் என்ன கைம்மாறு கிடைக்கப் போகிறது! கைம்மாறு சிறுதுங் கருதாது, பேரருட் பெருக்கத்தால் என்னைப் புரானி பாஸியில் தங்கள் மகனெனவே ஏற்றிப் போற்றிய அம்மாவே! அய்யவே! தாங்களே எனது பெற்றோர்களின் மறுபதிப்புகள்! ஏன்! மெய்ப் பெற்றோர்களே! எழுந்த கரங் கூப்பி, தாழ்ந்து நன்றி நவின்று வணக்கங் கூறுகிறேன்! விடைபெறுகிறேன்! ஆசி கூறி விடையளியுங்கள்! என்று சொல்லி, ஆம்! (வெட்கப் படவில்லை உண்மை கூற) அழுதேன்! அழுதேன்!!

ஆரத் தழுவினார் சுந்தர் பாய்! முந்தாணிப் புடவையால் எனது கண்ணீரைத் துடைத்தார்! இப்போது நினைத்தாலும் மெய் சிலிர்ப்பு ஏற்படுகிறது! வரட்டுமா அய்யா!......பிரிவு தாளாமல் அவரும் கண்ணீர் விட்டுவிட்டார்! (என்று வழியில் ஹேத்ராம் கூறினார்!—என் கண்ணீர் மல்கிய கண்களுக்கு பிரியும்போது எவர் முகமுந் தெரியவேயில்லை. ஆம்! குருடனெனவே விடைபெற்றேன்). சந்த்ராம் என்னை இறுகப் பிடித்து அணைத்துக் கொண்டார்! நான் இறந்தால்தான் உன்னை மறப்பேன் என்றார். விடாமல் விட்டார். பிரியாமல் பிரிந்தேன்.

அவர் நினைவு ஏட்டில், எழுதிக் கொடுத்தது:

My best wishes for you and other friends who are working for the abolition of Caste·

...Sant Ram 19-2-54.

எல்லோருக்கும் வணக்கம். சென்று வருகிறேன். என்று விடைபெற்றுத் திரும்பினேன். மீண்டும் அடை மழை!

இந்த மழை நிற்காது, நேரம் ஆகிறது! இந்தா எனது மழைக்கோட்டையும், தொப்பியையும் போட்டுச் செல்! என்று அவைகளை எனக்குப் பூட்டி "கொரியா போர் வீரனாக" ஆக்கி அனுப்பினார்.

இணைபிரியா ஹேத்ராம் என்னை விட்டுவிடுவாரா! பெட்டியை வாங்கிக் கொண்டார். பையையும் படுக்கையையும் வாங்கிக் கொண்டார். சைகளில் கட்டுவித்துத் தள்ளிக் கொண்டே வந்தார்.

கடைசியாக தமிழ் பேசக் கேட்டு மகிழ்ந்த பஞ்சாப் தோழருக்கு வணக்கம் சொல்லி விடைபெற்று நடை போடுகிறோம். புரானிபாஸியை விட்டோம். பெருக்கெடுத்தக் கண்ணீரை விரைந்தடித்த அடைமழை கழுவிவிட்டது.

ஹேத்ராம் ஜீ! கொஞ்சம் இருங்கள் ஒரே ஓட்டமாக இதோ விஸ்வபந்து ஜீயிடம் விடை பெற்றுக் கொண்டு வந்து விடுகிறேன்!

என்ன! இந்த மழையிலா ஊர் பிரயாணம்! நாளை போகக் கூடாதோ!...

இல்லை சாது ஜீ! இம்மழையை யெல்லாம் பார்த்தால் நான் சந்த்ராமையும் தங்களையும் பார்க்கவே முடியாது.

சென்று வருகிறேன். விடை யளியுங்கள். இதோ எனது நினைவு ஏடு!......Wish you the best peace of mind

—Vishva Bandhu.

வாருங்கள் ஹேத்ராம் ஜீ—விடை பெற்றுக் கொண்டேன்.

ஹோஷியார்பூர் சேர்ந்து விட்டோம். மழையும் ஓய்ந்தது.

மழை கோட், தொப்பி—கழற்றிக் கொடுத்து விட்டேன் ஹேத்ராமிடம். அவரது கடையில் வைத்துவிட்டார். அதற்குள் அவரது ஆள் ஹோஷியார்பூர் ஸ்டேஷனிலிருந்து வந்து இன்று இரண்டு மணி கழித்து, தாமதமாகத்தான் இரயில் புறப்படுமாம் என்றார்.

நல்லதாய்ப் போச்சுது! வாருங்கள் ஓட்டலுக்குப் போகலாம் என்றழைத்தார் ஹேத்ராம்.

சுந்தர் பாய் பாட்டிக் கட்டிக் கொடுத்த கட்டுச்சோறு மூட்டையைத் தூக்கிக் கொண்டு அவர் பின் தொடர்ந்தேன்.

மிலிடரி ஓட்டலில் நுழைந்தோம்! "சாப்ஸ்" கறி கணிசமாக வரவழைத்தார். பாட்டியின் அன்பு உறைந்த சோற்றுக்கும், சாப்ஸ் காரத்திற்கும் அருமையாய் வாய்ந்தது கலவை! வயிற்றை நிறப்பி நிமிர்ந்தேன். புகை ஊதி உண்ட களைப்பாறினேன்.

சைகளில் பிகாரிலால் வீட்டிற்குச் சென்றேன். அருமைக் கண்மணிகள் ரீட்டா, ஊர்மிளா, பிகாரிலால் அவரது மனைவி மற்ற மக்களிடம் விடைபெற்றுத்திரும்பினேன். நேராக தக்கர் தாசிடம் சென்று விடைசொல்லித் திரும்பினேன். அவர்கள் இருவரும் தத்தமது கையெழுத்தையும், விலாசங்களையும் எனது நினைவு ஏட்டில் குறித்துக் கொடுத்தார்கள்.

ஹேத்ராம்ஜீ! எனது எல்லா குறைகளுந் தீர்ந்தன.

ஹோஷியார்பூர் ரயிலடிச் சேர்ந்தோம். இரயிலேற்றினார் ஹேத்ராம்! "டிலக்ஸ்" சிகரெட் பாக்கெட் வாங்கித் தந்து விடை கொடுத்தார் ஹேத்ராம்! அவரது கை குலுக்கி, கண்ணீர் உகுத்து, விடை கொண்டேன் நான்! மணி யடித்தது! பச்சைக் கொடி பறந்தது! கூவென்று கூவிக் கொண்டே இரயில் நகர்ந்தது. மறைந்தது புரானி பாஸி! நிறைந்தது துயரம் என் உள்ளத்தில்

ஜலந்தர் நகரம் வந்தது. இறங்கி இரயிலில் மாறினேன்! தில்லி வந்தேன். திருவாளர்கள்—வீராசாமி, பேபி கந்தசாமி, ஆதரித்தார்கள்! அன்றிரவே இரயில் ஏறினேன். ஆக்ரா வந்தேன்! தாஜ்மஹால் கண்டேன்! களித்தேன். நான் பெற்ற பேறே பேறு. ஃபிட்டாபூர்சிக்ரி, பஸ்ஸில் சென்றேன்! நெடுங் கோட்டைதனைக் கண்டு வியந்தேன். மீண்டும் ஆக்ரா வந்தேன், இரயில் ஏறினேன்! சென்னை சென்ட்ரல் வந்து சேர்ந்தேன். எல்லோரையும் பஞ்சாபில் விட்டுப் பிரிந்து வந்து விட்டோமே என்று சோர்ந்து சாய்ந்தேன்!.........

அப்பாடா! எனது இந்த பஞ்சாப் கட்டுரையின் முதல் கட்டம் இத்தோடு முடிகிறது.

அடுத்த கட்டம் "நான் கண்ட சந்த் ராம்" என விரித்தெழுத நிற்கிறேன். அதைப் பற்றின விவரம் அடுத்து வரும்.

கலை அரங்கம்

நீதிபதி

விஜயா பிலிம்ஸ் தயாரிப்பு

●

வைரம் என்ற ஆடலழகியின் வசப்பட்டு மைனர் வாழ்வு நடத்தி வருகிறார் தியாகராசர். தனது அண்ணன் மரணப் படுக்கையில் அவதியுறும் போதுகூட அவரைப் பார்க்க மறுக்கிறார். அந்த அளவுக்கு வைரத்தின் வலை விரிந்திருந்தது. பிறகு அண்ணனின் சொத்துக்கு, தான் உரிமையாகி விட்டால் வைரத்துடன் நடத்தும் வாழ்க்கை மேலும் இனிக்கும் என்று வைரமும்—தியாகராசரும் வைரத்தின் மாமனான பஞ்சவர்ணமும் திட்டமிட்டு கணவனைப் பிரிந்து மாணிக்கம் என்ற 4-வயது மகனுடனும் கர்ப்பவதியாகவுமுள்ள அண்ணி வீட்டைத் தேடிச் செல்லுகிறார் தியாகராசர்.

சூதுவாதற்ற அண்ணி மரகதம், தியாகராசரையும், வைரத்தையும் தம் இருப்பிடத்திலேயே வந்து வாழும்படி வேண்டி, பிறகு தனது சொத்துக்கு முழு உரிமையும் தியாகராசருக்கே என்று எழுதி கொடுத்து விடுகிறாள்!

தங்களின் திட்டம் வெற்றி பெற்ற பிறகு அண்ணியின் உயிருக்கே கேடு விளைவிக்க முயல்கிறார் தியாகராசர். இதனை யறிந்த அண்ணி இரவோடு இரவாக வீட்டைவிட்டு வெளியேறி மாதா கோயிலில் தஞ்சமடைகிறாள். எனினும் தியாகராசரின் ஆட்கள் பின் தொடர்ந்து குழந்தை மாணிக்கத்தைத் தூக்கிச் சென்று வயலில் போட்டுவிட்டு மறைகின்றனர். தூக்கத்திலிருந்து எழுந்த மரகதம் தனது மகனைக் காணுமல் தக்கிக்க, பாதிரியாரின் கருணையால் காப்பாற்றப் படுகிறாள். மரகதத்திற்கு அங்கு இரண்டாவது மகன்—ராஜா பிறக்கிறான்.

இந்த விவரம் அறிந்த தியாகராசன், மரகதத்தை ஒரு குற்றத்தில் சம்பந்தப்பட்டதைப்போல செய்ய, போலீசாரால் கைது செய்யப்படுகிறாள். இரண்டாவது மகன் ராஜா பாதிரியின் உதவியால் அனாதைப் பள்ளியில் சேர்க்கப்பட்டு வழக்கறிஞர் தேர்வில் வெற்றி பெறுகிறான். ராஜாவுக்கு புகழ் ஓங்குகிறது.

வயலில் எறியப்பட்ட மாணிக்கம் அவ்வூர் வாசி ஒருவரால் காப்பாற்றப்பட்டு அந்தக் குடியானவனின் மகளான மீனாவுடன் அண்ணன் தங்கைபோல வளர்ந்து வருகிறார்கள். மீனா பூ விற்பதையும், மாணிக்கம் மிட்டாய் விற்பதையும் தங்கள் தொழிலாகக் கொண்டிருந்தார்கள்.

தியாகராசனின் லீலா விநோதங்கள் எல்லையில்லாமல் தலைவிரித்தாடின. பூக்காரி மீனாவையும்—தனது கணக்கப்பிள்ளை வடிவேலு முதலியாரின் மகள் கண்ணம்மாவையும் கற்பழிக்க திட்டமிடுகிறான்—வழக்கறிஞர் ராஜா கண்ணம்மாவைக் காதலித்து வருகிறார். தியாகராசனின் லீலா விநோதங்களுக்கு உட்படாத மீனா தனது கற்பைக் காப்பாற்றிக்கொள்ள உயிரையே அர்ப்பணித்து விடுகிறாள். தனது தங்கையின் வாழ்வைக் கெடுத்த தியாகராசரை பழிக்குப் பழி வாங்குவதென்று துணிகிறான் மாணிக்கம். இவ்விருவரும் சண்டையிடுகையில் குறுக்கிட்ட வைரம், தியாகராசர் வீசிய கத்தியால் தாக்குண்டு மடிகிறாள்.

இந்தக் கொலைக் குற்றம் தியாகராசரின் சாகசத்தால் மாணிக்கம் மீது சுமத்தப்படுகிறது. மாணிக்கம் போலீசாரிடம் சிக்காமல் நாடக சம்பெனியில் சேர்ந்தும் மற்றும் பல மாறுவேடங்களுடனும் தலைமறைவாகத் திரிகிறான். இவனைப் பிடிக்கும் பொறுப்பை இன்ஸ்பெக்டர் மாதவன், ஹெட் கான்ஸ்டேபிள் மாம்பழ நாயுடுவுக்கு அளிக்கிறார்.

வீண் பழிக்கு ஆளாகி அவதியுற்ற மரகதம் மக்களை இழந்த சோகத்தால் தெருத்தெருவாய் அலைந்து திரிந்து உயிருக்கு ஊசலாடிய நேரத்தில். எதிர்பாரா வண்ணம் வழக்கறிஞர் ராஜாவால் காப்பாற்றப்படுகிறாள்,

கண்ணம்மாவுக்கும்—வழக்கறிஞர் ராஜாவுக்கும் திருமணம் நடைபெறுகிறது. கண்ணம்மாவின் யோசனையின் மீது மரகதம், ராஜாவின் வீட்டிற்கு துணைக்காக அழைத்துச் செல்லப்படுகிறாள். எனினும் தாய்—மகன் என்று இருவருக்கும் தெரியாது.

கண்காட்சி ஒன்றுக்குச் சென்றிருந்த கண்ணம்மாவை மிகத் தந்திரமாக தியாகராசரின் ஆட்கள் ஏமாற்றி அவரின் மாளிகைக்குக் கொண்டுவந்து சேர்க்கின்றனர். தியாகராசர் கண்ணம்மாவை கற்பழிக்க முயலும் சமயம் எதிர்பாராவகையில் மாணிக்கம் அவ்விடம் தோன்றி தியாகராசரை சுட்டு வீழ்த்துகிறான். ஏட் மாம்பழ நாயுடு மாணிக்கத்தைக் கைது செய்கிறார். மீனாவை யிழந்த சோகத்தினால் புத்தி தடுமாற்றமடைந்து அலைந்து திரிந்த மாயாண்டியும் அவ்விடம் வருகிறான். அவன் கூறும் விவரத்தால் மாணிக்கம் மரகதத்தின் மகனென்று தெரிகிறது.

மரகதம் தனது மகனை விடுவிக்க வழக்காடுமாறு வழக்கறிஞர் ராஜாவை வேண்டுகிறாள். எனினும் அன்றுதான் ராஜாவுக்கு நீதிபதி பதவி கிடைத்தது.

இறுதியாக மாணிக்கத்தின் வழக்கு நீதிபதி ராஜாவிடமே விசாரணைக்கு வருகிறது.

ராஜாவுக்கு, மாணிக்கம் தனது அண்ணன் என்றோ அல்லது மரகதம் தாய் என்பதோ இது வரை தெரியவில்லை. மரகதம் தனது மகனுக்காக தயவு காட்டுமாறு நீதிபதி ராஜாவிடம் (வீட்டில்) தாள்வணங்கி வேண்டுகிறாள், நீதிபதி ராஜா வேண்டுகோளை ஏற்க மறுக்கிறான். இந்நிலையில் வெளியூர் சென்றிருந்த பாதிரியார் ராஜாவின் இல்லத்திற்கு வர அவ்விடம் மரகதத்தைக் காண அவர் கூறிய விவரங்களால் மரகதம் தனது தாய் என்றும் மாணிக்கம் தனது அண்ணன் என்றும் தெரிந்து திடுக்கிடுகிறான்.

எனினும் மாணிக்கத்தின் வழக்கில் நீதிபதி ராஜா தனது கடமையிலிருந்து தவறுமல், ஆனால் மன வேதனையுடன் ஆயுள் தண்டனை அளிக்கிறார், மாணிக்கத்திற்கு.

மாணிக்கம் சிறைச்சாலைக்கு அழைத்து செல்லப்படும்போது நீதிபதி ராஜா தான் தம்பி என்று அறிவித்து தக்கிக்க—ராஜாவின், கடமை உணர்ச்சிக்கு அவனைப் பாராட்டுகிறான் மாணிக்கம்,

மரகதம், ராஜா கண்ணம்மா இல்லம் திரும்புகின்றனர் ஏட் மாம்பழ நாயுடு சப் இன்ஸ்பெக்டர் பதவிக்கு உயர்த்தப்படுகிறார், இக்கதை தோழர் சோலைமலை தீட்டியதாகும்.

வசனம்— தோழர்கள் சோலைமலை, ஏ. கே. வேலன் உருவாக்கி யிருக்கின்றனர்.

*

நடிப்பு

நடிப்புப் புலவர் கே. ஆர், ராமசாமி மாணிக்கமாகத் தோன்றி தமது அபார திறமையைக் காட்டியிருக்கிறார். மிட்டாய் விற்பது, கூலிக்காரனாகத் தோன்றுவது சாணை பிடிப்பது, நாடகமேடையில் பழங்கால "ராஜபார்ட்" போல நடிப்பது ஆகிய கட்டங்களில் கே. ஆர். ஆர். அவர்களின் நடிப்பு இணையற்று விளங்குகிறது. அது போலவே மரகதம் தனது தாய் என்று தெரியும் கட்டத்தில் கே. ஆர். ஆர். அவர்களின் நடிப்பு ரசிகர்களை கண்ணீர் சிந்தச் செய்கிறது. நீதி மன்றத்தில் வாதிடும் போது அவரது நடிப்பில் காணப்படும் உணர்ச்சி மறக்க முடியாததாகும்.

எனினும், ஒரு குறை நமது மனதை மிகவும் வேதனையடையச் செய்கிறது. போலீசாருக்குப் பயந்து பெண்வேடத்தில் தோன்றும் கட்டம்—கே. ஆர். ஆர் அவர்கள் திரைப்பட உலகில் அடைந்துள்ள தனிச் சிறப்புக்கு ஊறு செய்வதாகும். பெண் வேடத்தில்தான் தோன்றினாரென்றால், மாம்பழநாயுடுவுடன் அளவுக்கு மீறிய கூத்தடிக்கவும் வேண்டுமா? இனி இவ்வித முறை கே. ஆர் ஆர். நடிக்கும் படங்களில் தலை காட்டாது என்று நம்புகிறோம்.

ராஜாவாகத் தோன்றும் ஜெமினி கணேசன் தாம் ஏற்றுள்ள பாகத்திற்கேற்ப கூடுமான அளவு கச்சிதமாகவே நடித்திருக்கிறார். எனினும் சோகக் கட்டங்களில் இவரின் தோற்றமும் நடிப்பும் நிறைவுபெறவில்லை.

தியாகராசராகத் தோன்றும் தோழர் சகஸ்ரநாமம் தமது நடிப்பின் தன்மை உயர வேண்டும் என்ற பொறுப்புணர்ந்து நடித்திருக்கிறார். ஆனால் காதல் கட்டத்தில்—(வைரத்துடன் கொஞ்சிக் குலாவும் கட்டம்) அவ்வளவாக சோபிக்கவில்லை.

ஏட் மாம்பழ நாயுடுவாக நடிக்கும் தோழர் டி. எஸ். பாலையா இயற்கையாகவும் பிரமாதமாகவும் நடித்திருக்கிறார். உண்மையான எட்கான்ஸ்டேபில்கள்கூட இவரின் நடிப்பைக் கண்டு திகைத்து விடுவார்கள் என்றுகூறினால்மிகையாகாது. இவரது நடிப்பில் யாதொரு குறையும் கூறுவதற்கில்லை.

மற்றும் பாதிரியாராகத் தோன்றும் டி. பாலசுப்ரமண்யம், பஞ்சவர்ணம் வேடத்தில் தோன்றும். சி. எஸ். பாண்டியன், கணக்கப்பிள்ளையாக நடிக்கும் நாடகாசிரியர் பொன்னுசாமிப் பிள்ளை, இன்ஸ்பெக்டராக நடிக்கும் எம். கே. முஸ்தாபா, மாயாண்டி வேடத்தில் தோன்றும் கரிக்கோல்ராஜ் ஆகியோரும் கச்சிதமாக நடித்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெறுகின்றனர்.

மரகதமாக நடிக்கும் தோழியர்: கே. மாலதி, சோகக் கட்டங்களில் ஏறத்தாழ தோழியர் பி. கண்ணாம்பாவைப் போல நடித்திருக்கிறார். மாணிக்கம் தனது மகன் என்று தெரியவரும் கட்டத்திலும், அவனை விடுவிக்க வேண்டிநிற்கும் கட்டத்திலும் மாலதியின் நடிப்பில் தாய்மை நிறம்பியிருப்பதுடன் ரசிகர்களை துயரக் கடலில் ஆழ்த்துகிறது.

கண்ணம்மாவாகத் தோன்றும் தோழியர் ராஜசுலோசனா வழக்கம்போல ரசிகர்களின் கண்களுக்கு விருந்தளித்து நடிக்கிறார்.

மீனாவாக நடிக்கும் தோழியர் குசலகுமாரி எதிர்காலப் புகழுக்கு அஸ்திவாரம் அமைப்பது போல தாம் ஏற்றுள்ள பாகத்தை நிறைவு செய்திருக்கிறார்.

தோழியர் பி, எஸ், ஞானமும் — மாம்பழ நாயுடுவின் துணைவியாகத் தோன்றி ரசிகர்களின் 'அப்ளாசை'ப் பெறுகிறார்.

பாடல்கள் — உடுமலை நாராயண கவி, மருதகாசி, கவிஞர் கண்ணதாசன், காமாட்சி சுந்தரன் ஆகியோர் இயற்றியுள்ளனர். பாடல்கள் அனைத்தும் பொருள் பட அமைந்துள்ளன.

டைரக்ஷன்—இப்படத்தின் வெற்றிக்கு டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி அவர்கள் திறமையும் பெருந்துணையாகுமென்பது ரசிகர்களின் ஒருமித்த எண்ணமாகும்.

மற்றும் பின்னணிப் பாடகர்கள், ஒலிப்பதிவு. ஒளிப்பதிவு, உடை யலங்காரம், மேக்கப் முதலியன அனைத்தும் நல்ல முறையிலே அமைந்திருக்கிறது.

படத் துவக்கத்தில் நடைபெறும் நடனக் காட்சியைக் கூடுமான அளவு குறைத்தால் படத்தின் விறுவிறுப்பு துவக்கத்திலிருந்தே நடைபோடும்.

● நீதிபதி — படத்தில் சில சிறு குறைபாடுகளிருப்பினும் பொதுவாக ஓர் உயர்தரப் படம் என்பதே ரசிகர்களின் கருத்தாகும்.

இவ்வித சிறந்த படத்தை தயாரித்து வெளியிட்ட தோழர்கள் டி. கோவிந்தராசன், என். எஸ். திரவியம், விஜயா பிலிம்ஸ் ஆகியோர் திரைப்பட ரசிகர்களின் பாராட்டுதலுக்கு உரித்தானவர்களாவர்,

—வீரன்

★

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம், 15, சிலையன்ஸ் ரைஸ்மில் தெரு, சென்னை-1